KALANILAYAM

தனிப்பிரதி விலை 0-2-6 அணா.

# கலாநிலயம்

**A Literary Weekly**

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

கலாநிலயம் :—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol. 8] 1935 ௵ மே ௴ 2 உ [No. 18

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 273
2. கம்பராமாயணம் (கிட்கிந்தைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A., B. L., 275
3. ஒத்தெல்லோ (அங்கம் 2. களம் 1. 2)
Shakespeare's "Othello" 277
4. காலத் தொனி
T. R. இராஜகோபால் 279
5. நரவாகன தத்த சரிதம்
S. சோமசுந்தர தேசிகர் 281
6. நம்மாழ்வார் வைபவம் (7-ம் பத்து, 6-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L. 283
7. கம்பர் சிருட்டியிற் பிறந்த கற்பினள்
K. நாராயண ரெட்டிகாரு 285
8. வர்த்தமானம் 288

## கலாநிலயம்

### யாருக்கு ?

உயரிய நூல்கள் உலகத்தில் இல்லாமல் இல்லை; ஆயினும், மக்கள் அவைகளைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டியதில் பதினாயிரத்தில்ஓரளவுகூடப் பயன்படுத்திக்கொள்வதும் இல்லை. நாம் முன்னொரு தலையங்கத்தில்காட்டியுள்ளபடிமரணத்தின்அருமையையெல்லாம் தன்னுள் அடக்கிய, "சாக்காடு வித்தகற்குஅல்லால் அரிது" என்னுமொருமாபெரும்வாக்கியத்தை விளம்புகின்றதிருக்குறள்,"அழுதாற் பெறலாமே"எனக்கடவுளைஅடைவதற்கோர் இணையிலா நெறியைச் சாற்றுகின்ற திருவாசகம், போன்ற தெய்விக நூல்களெல்லாம், இக்காலத்தில் ஆர்வமுடைய சில சங்கங்களால் அடக்கவிலைப்பதிப்புக்களாக அச்சிடவும், சில அன்பர்கள் அதனை ஆளுக்குப் பத்துப் புத்தகம் வீதம் வாங்கும்படி வற்புறுத்தவுமேதான் பாடப்பெற்றிருப்பனவாகக் கொண்டாடப் பெறுகின்றன. மணிவாசகப்பெருமானைக்காலஆராய்ச்சியின் கையில் காட்டிக்கொடுத்துவிட்டனர்; திருவள்ளுவர் 'நாள்' கொண்டாட்ட முழக்கத்தில் கலந்துகொள்ள வேண்டியவராகிவிட்டார். கம்பர் நூலைக் கைக்கொள்வதெல்லாம் இடைச்செருகல்களைத் தேடிப்பிடிப்பதற்கும் பாடபேதங்களைப் பற்றிக்கொள்வதற்குமே. இனி, உச்சிமேற்புகழ்வதற்கும் அல்காப்புகழிற்கும் எதுகையாவதற் கன்றி, நச்சினார்க்கினியரும் தொல்காப்பியமும் தோன்றியதில்லை யென்னும்படி முடிய நேர்ந்ததே. தமிழ் மாணவர்களாக இருக்கவேண்டியவர் தமிழ் அன்பர்களாகத் திரிந்துவிட்டனர். இதற்கிடையில் அப் பகவத்கீதை படும்பாடு பகவனுக்கே தெரியும். இவைகளெலாம் இப்படியாக, 'நாலடியார்' பாடஞ்சொல்வதற்கன்றி வேறு எதற்காகப் பாடப் பெற்றிருக்கக் கூடும்.

இன்னவாறெல்லாம்,உயரிய நூல்கள்உபயோகமாகாமற் போவதற்கு உரிய காரணங்களை உற்று நோக்கினால் இரக்கம் மிகப் பெருகுகின்றது.

திருக்குறள் திருவாசகம் அனைய திப்பிய நூல்களில் அரிய பெரிய பொருள்கள் பல தென்படுவதால், அவைகளிற் சிலவற்றைத் தாமே நேரிற் கண்டவர்களும், தாம் காணாவிடினும் அன்னவை அவைகளில் உண்டு என்று நம்புகின்றவர்களும், நல்வாழ்க்கைக்கு மிகமிகச் சிறந்த நற்சாதனங்களாம் அவை என்னும் உறுதியை எளிதில் அடைந்தவர்களாகின்றனர். இது தக்கதே. ஆயினும், யாருடைய நல்வாழ்க்கைக்கு?— அதுதான் மிகவும் நுட்பமான ஒரு கேள்வி. சீரணம் குறைந்திருந்த ஒருவன் வைத்தியரை நாடி அதற்கு என்ன செய்யலாம், என்று கேட்க, அதற்கு அவர், "நாள்தோறும் நீர் வெறும்வயிற்றில் நடக்கவேண்டும்" என்று சிகிச்சை கூறுதலும் அந் நோயாளியோ உடனே, "யார் வயிற்றில் ?" என்ன வினவினனாம். இதனுள் அடங்கிய நகைச்சுவைக்கிடையே, பொதுமானுடமனத்தின் மிகவும் பெரிய இரகசியம் ஒன்று வெளிப்படுகின்றது.சீரிய நூல்களெல்லாம் மற்றவரு

டைய நல்வாழ்க்கைக்கே உபாயமாகச் செய்யப்பட்டிருக்கின்றனவென்றுதான் ஒவ்வொருவரும்சொல்லாமற் சொல்லி விவகரிக்கின்றனர். "திருக்குறளால் மிக்கபயனுளது" என்றுஒருவர் நமக்குச்சொல்லும்பொழுது, "யாருக்கு?" என்ற ஒரு கேள்வியை அவர் தாமே கேட்டுக்கொள்ளுவாராயின், திருக்குறளையும் விட அக்கேள்வியிற்றான் அதிக பயன் உளது என்ன எண்ணவேண்டும். இக் கேள்வியால் அலசப்பெறாத வரையில், தமக்கே யொருபயன் அந்தத் திருக்குறளினின்று வாய்ப்பதற்குளதென்ன நினைக்கவும் நேர்கின்றதில்லை. அவ்வளவில், திருக்குறளும் திருவாசகமும் அடக்கவிலைப் பதிப்புக்களாக வெளிவந்துவிடுகின்றன.

காரணம் யாது? அதனைப்பற்றி ஆராய்வதன்முன், இக்கட்டுரையைப் படிக்கின்றவர் தமது நண்பர்களை விளையாட்டாக ஒரு சிறிய சோதனைக்கு உட்படுத்தி அதன் முடிவைத் தேர்ந்துகொள்வது உதவியாயிருக்கும். பலவகைப் பொருள்கள் வைத்திருக்கின்ற ஒரு அறையிற்குள் நாலைந்துபேரை அழைத்துச் சென்று, இரண்டு மூன்று நிமிடங்களுக்குள் அவ் வறையின் கண்ணுள்ளவைகளைக் கவனித்து மனத்திற் கொள்ளும்படி சொல்லி, பிறகு வெளிவரச் செய்து அவ் வறையில் அவர் கண்டவைகளைப் பட்டியெழுதும்படி ஒவ்வொருவரையும் தனித்தனி ஏவினால், அப்பட்டிகளில் அவனவனுடைய புத்தியின் கூர்மைக்கும் வேகத்திற்குந் தக்கபடி பல்வேறு பொருள்கள் குறிக்கப்பட்டிருக்கும். அங்கிருந்த, மேசை நாற்காலி புத்தகம் சுவர் தரை கூரை படம் ஈ எறும்பு எல்லாவற்றையும் எழுதியிருப்பார். குப்பைகாகிதம் துணிமுதலியவைகளும் இன்னும் அங்கிருந்த ஏனைய பொருள்களிற் சில பல குறிக்கப்பெற்றிருக்கலாம். ஆயினும், இன்னவைகளையெல்லாம் அங்குஅவர் காண்பதற்கு இன்றியமையாததாகிய வெளிச்சம் அவ் வறையில் இருந்ததென்பதை ஒருவரும் கவனித்துக் கருத்திற் கொண்டிருக்கமாட்டார். இந்தச் சோதனை மிகவுஞ் சுவையுடையது. ஆயிரம்பேரை இவ்விதச் சோதனைக்குள்ளாக்கினால் அவ் வாயிரம்பேரில் ஒருவரேனும், அறையில் இருந்த வெளிச்சத்தைத் தம் பட்டியில் குறிப்பாரோ என்பது சந்தேகத்திற் கிடமானதே. பொருள்களிற் சில பல காண்பார் மனிதர், ஆயினும் அப்பொருள்களைக் காட்டுகின்ற ஒளியினை மறந்துவிடுவார். நம் திருக்குறள் அனைய நூல்களிற் காணப்படுகின்ற பொருள்களும் இந்தக் கதியையே அடைகின்றன. இந்நூல்களில் சீரிய பொருள்கள் சிற்சில இருக்கின்றனவென்பதை அறிவதனால் மாத்திரம் போதாது. அப்பொருள்களைத் தெரியக் காட்டுகின்ற ஒளியும் வேறொன்றுளதென்னும் உணர்வும் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் 'இந்நூல் பயன்படும்' என்றவுடன் பிறக்கவேண்டியதாகி இருக்கின்ற "யாருக்கு?" என்னுங்கேள்வி தக்கவிடை பெற்றதாகும்.

புலவர்கள் அமைக்கின்ற பொருள்கள், அப்பொருள்கள் அமைக்கப்படுதல் வேண்டும் என்னும் ஒரு கருத்தினால் மாத்திரமே அமைக்கப்படுவன அல்ல. தாம் அமைத்த பொருள்களைப் பிறர் காணவேண்டும் என்னுங் கருத்தும் அவருக்கு உண்டு. ஆதலின் பொருள்களை அமைப்பதோடு நில்லாமல் அவை தென்படக்கூடிய வோர் ஒளியையும் பரப்பிவைக்கின்றனர். அவ்வொளிதான் யாதென்றுசொல்லுவதனினும் உணர்ந்துகொள்வதே எளிது. எனினும், தாம் சமைத்துவைத்திருக்கின்ற பொருள்களைப்பிறர் கண்டுஅறிந்து அதனால் பயனடைய வேண்டுமென்று அவர் கொண்டிருக்கின்ற ஒரு திப்பிய ஆர்வமே, அவ் வொளியாகுமென்ன உரைத்தல் ஒருவாறுபொருந்தக்கூடும். அவ்வார்வத்தின் அளவையும் அது பிறப்பதற்கு ஆதாரமாயிருந்த அவர்சிந்தனையும் சோதித்து அறியுங்கால் அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கின்ற பொருள்கள் புதியதோர் அழகும் பெருமையும் பயனும் பெறும். பெற்றக்கால், "நல்லார்கட் பட்ட வறுமையின் இன்னாதே கல்லார்கட் பட்ட திரு" என்றும், "நல்லாறெனினுங் கொளல்தீது மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று" என்னவும் திருவள்ளுவர் உரைத்திருப்பனபோன்றவற்றையும், மற்று,

கல்லாது போகிய நாளும் பெரியவர்கட்
செல்லாது வைகிய வைகலு—மொல்வ
கொடாஅ தொழிந்த பகலு முரைப்பிற்
படாஅவாம் பண்புடையார் கண்.

[புதியனவும் மெய்யறிவு பயப்பனவுமாகிய நூல்களைக் கற்காமல் வீணாகப் போக்கிய நாளும், பெரியவர்களிடம் சென்று நல்லவிஷயங்களைக் கேட்காமல் கிடந்த நாளும், தம்மால் கூடியதை இரப்பவர்க்குக் கொடுக்காமல்கழிந்த பகலும், சொல்லுங்கால், நல்ல பண்புடையவர்களுக்கு உண்டாகா. அதாவது, மனிதர் என்ற பண்பிற்கு உரியவராயிருக்கின்றவர் யாரும், கற்பனவற்றைக் கற்றுக் கேட்பனவற்றைக் கேட்டுக் கொடுப்பனவற்றைக் கொடுத்து வாழ்வதன்றித் தம் ஆயுளின் ஒரு நாளேனும் வீணாகக் கழிக்கமாட்டார்]

என்பது போன்று நாலடியாரில் நவிலப்பெற்றிருப்பனவற்றையும், வேறு எவ்வித ஆராய்ச்சிக்கும் இரையாக்காமல், இவை யாருக்காகச் சொல்லப்பட்டிருக்கின்றன என்னும் ஒரு கேள்வி கேட்டவுடன், இந்தக்கேள்விக்குப் பதிலாக, "நமக்குத் தான்" என்னும் எண்ணந் தோன்றுமாயின் அதனுடன் தீர்ந்துவிடலாகாது. "நமக்கு" என்னும் அப்பன்மையில் பெரியதொரு வஞ்சனை கரந்து கிடக்கின்றது. இத்தகைய விஷயங்களில், 'நாம்' 'நம்மை' 'நமக்கு' என்பனவனைய சொற்கள் இலக்கணப்படி உளப்பாட்டுத் தன்மைப்பன்மைகளே யாயினும், பொதுஜன மனமானது, தன்னைத் தவிர மற்றவர்களெல்லாம் அப்பன்மையில் அடங்கியிருக்கின்றார்கள் என எண்ணி விவகரிக்கப் பயின்றிருக்கின்றது. இது பெரியதோர் ஆன்ம வஞ்சனை. ஆயினும் அதனின்று தப்புவதற்குச் சுய ஆராய்ச்சி சிறிது போதும். அவ் வாராய்ச்சி செய்யப்படுகின்றதென்னும் நினைவோடு மீண்டும் அந்நூல்களை ஓதினால், பிறகு அன்னவாறு ஓதுவோன் நெஞ்சம் அவனைநோக்கி, 'இது உனக்காகவே நேரே அப் புலவரினால் உரைக்கப்பட்டிருக்கின்றது காண்' என்ன எப்பொழுதும் எடுத்துக் காட்டிக்கொண்டிருக்கும் என்பதில் ஐயமேயில்லை. அந்நிலையில், "சிற

யோர் உணர்ச்சியுள் இல்லை பெரியோரைப் பேணிக் கொள்வோம் என்னும் நோக்கு" மற்று, "எற்றுக் குரியர் கயவர் ஒன்றுற்றக்கால் தம்மை விற்றற் குரியர் விரைந்து" என்பனவனைய குறள்கள் ஒருவனது உணர்வினை யெட்டுங்கால், "என்னைப் பார்த்து இன்னது சொல்கின்ற இத் திருவள்ளுவருக்கு என்ன மறுமொழி சொல்லவல்லேன்" என்ன ஏங்குவதற்கிடையே அவருக்குந் தனக்கும் உண்மையான உறவு ஒன்று உண்டு என்பதையும் ஏற்றுக்கொள்வான். சமயநிலை தம்மிடம்வந்து அடையப்பெற்றிருக்கின்ற நன்மையோர், பேசாமற் பேசுகின்ற இப்பிரபஞ்சம் தமக்குச் சொல்லுகின்ற வதந்தியைச் செவிமடுத்து, "ஆம், கேட்டேன், உடன்பட்டேன்" என்று ஒவ்வாரென முன்னைய கட்டுரையில் மொழிந்துளோம். அன்னவாறே, இவர்களும், "வள்ளுவப்பெரும, ஆம், கேட்டேன் உடன்பட்டேன்" என மனமுற வணங்கி நிற்பார். பிரபஞ்ச வதந்தியிற் குறைந்தனவல்ல இப் புலவர்பெருமக்கள் பேசுஞ் சொற்கள். இனி இன்னவர்தாம் அடக்கவிலைப் பதிப்பிற்கும், திருநாள் கொண்டாட்டத்திற்கும் விரையமாட்டார்.

'கலாநிலயம்' கருதி முயல்வதெல்லாம் இவ்வளவு தான். உயரிய நூல்களை ஓதுவதற்கு இசையுங்கால் ஒவ்வொருவரும் அவை தனக்காகவே எழுதப்பட்டிருக்கின்றன என்னும் நினைவை எழுப்பிக்கொள்வதற்குரிய நிலையினை உண்மையாக்க வேண்டுமென்பது இக் கலாநிலயத்தின் ஊக்கமாம்.

---

# கம்பராமாயணம்

## கிஷ்கிந்தா காண்டம்—10. கிட்கிந்தைப் படலம்

[261-வது பக்கத் தொடர்ச்சி]

### இளையவன் சொற்கள் மெய்யே யாயின.

தாரையின் ஒழுக்கமும் அதனை அவள் மொழிந்து நின்ற தன்மையும் இழைக்கும் வியப்பினிடையேயும் இலக்குவன் அவைகளுக்கு உடன்பட்ட அதிசயம் மறையவில்லை. கூறுவார் அம்முனிவர்:—

இன்னவாறு தாரைகூறிய தர்மமான பணிமொழிகளை நற்குணமுள்ள லக்ஷ்மணர் எற்றுக்கொண்டார். அவ்வாறு அவர் எற்றுக்கொள்ளவே சுக்கிரீவன் லக்ஷ்மணரிடத்துக் கொண்ட அச்சத்தை, நனைந்த வஸ்திரத்தைக் கழிப்பது போல் நீக்கிவிட்டான். அதன்பின் அவன் தன் கழுத்தில் இருந்த அழகிய பல வர்ணமுடைய மாலையை அறுத்தெறிந்துவிட்டுக் கள்ளுண்ட மயக்கத்தினின்றும் நீங்கினான். பின்னர் அவன் அஞ்சத்தக்க பலத்தையுடைய லக்ஷ்மணரை நோக்கி மிக வணக்கமாக "சுமித்திரை புத்திர, கெட்டுப்போன எனது செல்வத்தையும், கீர்த்தியையும், வானர இராச்சியத்தையும் நான் இராமருடைய அருளினால் மறுபடியும் நிலைபேறுடையனவாகப் பெற்றுக்கொண்டுள்ளேன். பகைவரேறே, தமது தொழிலாற் புகழ்படைத்த அந்த இராமர்செய்த செய்கைக்குக் கைம்மாறு செய்ய யாரால் முடியும்? அவர் தமது சுயவலியினால், யான்செய்யும் சகாயமும்சிறிது துணையாக நிற்க, அவ்விராவணனைக் கொன்று சீதையை அடைவார். ஒரு பாணத்தினாலேயே எழு மராமரங்களையும், மலையையும், பூமியையும பிளந்த அவ்விராமருக்கு மற்றொருவர் துணைஎற்றிற்கு? லக்ஷ்மண, தமது வில்லினுடைய ஞாணைத் தெறித்த சத்தத்தினால் பூமியையும் மலைகளையும் நடுங்கச்செய்த இராமருக்குத் துணைவலியினால் யாதுபயன்? மக்களுள் எறுபோல்வாய், அவர் தமது பகைவனாகிய இராவணனை அவன் சேனைகளோடு கொல்லப் புறப்பட்டுப் போகுங்காலத்தில் நான் அவரைப் பின்றொடர்ந்து போவேன். நான் அவரிடத்து வைத்த விசுவாசத்தினாலாவது அன்பினாலாவது சிறிது ஆணையைமீறி நடந்திருப்பேனாயின் அதைப் பொறுத்துக் கொள்வதுஅவர் கடமையாகும். இவ்வுலகில் குற்றஞ்செய்யாதவன் யாவன்?" என்று கூறினான். மகாத்துமாவாகிய சுக்கிரீவன் இவ்வாறு சொன்னவுடன் லக்ஷ்மணர் பிரீதியடைந்து அன்போடு அவனை நோக்கிச் "சுக்கிரீவ, மிக்க வணக்கமுடைய உம்மைத் துணையாகப்பெற்ற என் தமையனாரானவர் எவ்வாற்றாலும் துணையாற் சிறந்தவரே. வலியாலும், நேர்மையாலும், தூய்மையாலும் மிகச் சிறந்த நீர் இந்த வானரஇராச்சியத்தின் திருவை அடைதற்குத் தக்கவரே. உம்முடைய சகாயத்தினால் வலியுடைய இராமர் தமது பகைவரை யுத்தத்தில் விரைவில் அழித்துவிடுவார். இதிற் சமுசயமில்லை. சுக்கிரீவ, அறமுணர்ந்தவரும் செய்ந்நன்றி அறிந்தவரும் யுத்தத்திற் பின்னிடாதவருமாகிய நீர் சொன்ன சொற்கள் மிகவும் பொருத்தமுடையன. வானரோத்தம, நீரும் எனது தமையனாரும்அன்றி, அறிவுடையவர் யார்தான் இவ்வாறு சொல்லவல்லவர்? ஆண்மையாலும்வலிமையாலும்இராமரையேநிகர்த்த உம்மைத் தேவர்கள் அவருக்குத் துணையாகக் கொடுத்திருக்கின்றார்கள். வீர, நீர் சீக்கிரம் என்னோடு புறப்பட்டுவந்து மனைவியைப் பறிகொடுத்து வருந்துகின்ற உமது தோழனைத் தேற்றுதல் செய்யும். துன்பத்தில் மூழ்கியிருக்கும் இராமருடைய வார்த்தையைக் கேட்டு நான் உம்மைக் கூறிய கடுஞ்சொற்களைநீர் மன்னிக்கவேண்டும்" என்றார்.

தன்னின்று உண்டவொரு காமத்தால் சுக்கிரீவன் தலைமயங்கினானென்றும், விரதமா முனிவர்களும் காமன்கைச் சரங்களைக் காக்கலாகார்களென்னவும் தாரை கூறியன, பொருள்பொதிந்த தருமமானமொழிகளாம் என்பது வடநூன்முனிவர் வகையறிந்து உரைக்குமொரு கருத்தாக நிற்கின்றது. ஆயினும், உத்தம தர்மமோ இது ஆகாதென்பது திண்ணம். பிறர் செய்த குற்றத்தைப் பொறுப்பதற்குரிய நோக்கங்கள் இவை ஆகலாமன்றித் தாம் இழைத்த தீமையைத் தாங்குமாறு இன்னவை எடுத்துக்காட்டித் தாமே தமக்குப் பரிந்துபேசினால் அது குற்றத்தின் மேல் குற்றமேயாகும். எனின் மனிதர்க்குரிய மாபென்று மதிக்கமாட்டாத இது தர்ம மாகவேண்டுமெனின்,

ஐய நுங்க ளருங்குலக் கற்பினப்
பொய்யின் மங்கையர்க் கேய்ந்த புணர்ச்சிபோற்
செய்தி லன்னெமைத் தேமலர் மேல்வன்
எய்தி னெய்திய தாக வியற்றினன்.

மணமு மில்லை மறைநெறி வந்தன
குணமு மில்லை குலமுதற் கொத்தன
உணர்வு சென்றழிச் செல்லு மொழுக்கலால்
நிணமு நெய்யு மிணங்கிய நேமியாய்.

பெற்றி மற்றிது பெற்றதொர் பெற்றியிற்
குற்ற முற்றிலெ னீயது கோடியால்.

என்றுவாலி வாதித்துள்ளவண்ணம்குரக்கினத்தைச் சார்ந்துநின்ற ஒரு தருமமே ஆதல்கூடும் என்பதைப் பறைசாற்றுகின்றது. இன்னபடி கம்பரது நூலினுள் வாலிவாதித்ததன் வாய்மையையும் அதற்குஅமைதி கூறப்புக்க இராகவன் இறுதியில் வாயிழந்து நிற்க நேர்ந்ததன் இன்றியமையாமையையும் வான்மீக முனிவர் இப்பாகத்தில் தாரைசுக்கிரீவனுடைய ஒழுக்க முறையின்கண் வைத்து வற்புறுத்தி யிருக்க, முன் இவ்விராமன் தன் வாளிதைத்த புண்ணின் வழியே, "நான் உன்னைக் கொன்றதன் காரணம் புராதனமாயுள்ள தருமத்தைவிட்டு நீ உன்னுடைய தம்பியின் மனைவியைக் கவர்ந்துகொண்டாய் என்பதே. பாப கருமங்களைச்செய்துவரும் நீஅந்தமகாத்துமாவான சுக்கிரீவனுடைய மனைவியாகவும் உனக்கு மருமகள் போன்றவளாயுமுள்ள உருமை என்பவளை வைத்திருக்கின்றாய்; நீ தருமத்தினின்று விலகிவிட்டாய்; நான் இதற்காக உன்னைத் தண்டித்தேன்" என்று உற உறக் கூறியதவ்வளவும் அமைதியற்றதாய்த் தீர்ந்துவிடுகின்றதே.

இராமன்முன் வாலிக்குச் சொன்னவைகளை அருகே நின்று கேட்டிருந்த இலக்குவன், இப்பொழுது இத்தாரை சுக்கிரீவர்களுடைய ஒழுக்கத்தைப் பார்க்கின்றான். அன்னவர் பேசுவதையுங் கேட்கின்றான். கேட்டுத்தான் அப்பொழுதுஅவர்மேற்கொண்டசீற்றம் தக்கதன்றெனமன்னிப்புங்கேட்டுவிடுகின்றான். "உலகத்தில் குற்றஞ் செய்யாதவன் யாவன்" என்று சுக்கிரீவன் கேட்ட கேள்வி இலக்குவனது உள்ளத்தை உருக்கிவிட்டது போலும். மற்று, "சுக்கிரீவ, நீரும் எனதுதமையனுமன்றிஅறிவுடையார் யார்தானிவ்வாறு சொல்ல வல்லார்" என்று இலக்குமணன் வியந்தது,வான்மீகர் நூலில் வாய்மையேயாகஅமைந்திருப்பினும் அந்தரம் நோக்கின் வஞ்சனைக் குறிப்புடைய வாசகமேபோலத் தோன்றவுந் தகும்.குற்றஞ் செய்யாதவர் யாருளர், என்ற சொல்லினும் பெரிய உலகநிந்தனையும் தெய்வநிந்தனையும் வேறில்லை. துரியோதனன் அனையவர்களே தூற்ற வல்ல ஓர்பொதுப் பழியாம் இது. சுக்கிரீவன் இவ்வபவாதத்தைத் தன் பிழைக்கு ஆதாரமாக்கிக்கொள்வதே இகழத்தக்கதாமெனின், சுக்கிரீவனல்லாக்கால் இன்னது சொல்ல வல்லவன் இராமனேயன்றி வேறிலர் என்று இலக்குவன் பாராட்டுவதை உயர்வுற மதித்தல் எங்ஙனம் இயலும்? மற்று இராகவன் அவ்வகை யொன்றும் வினம்பியுள்ளபரிசும்வான்மீகர் நூலிற் காணலருமை. எனின், இதுபற்றி இராகவனை வியப்பது விபரீதமே யாவதுடன் உண்மையன்றாகவும் முடிகின்றது. கம்பருக்கு மிகஅருமையான இலக்குவன் பொய்யனாகத் தரிக்கிலர் இப்புலவர்; ஆதலின் அவன் அங்கு வான்மீகத்தில் கூறிய அச்சொற்கள் மெய்யாகும்படி கம்பர் தம் நூலினுள் இடஞ்செய்தளிக்க நினைத்தவரே போன்று, முன், வாலியும் சுக்கிரீவனும் புரிந்திருந்த போரைக் காண ஆற்றாமல் இலக்குமணன்,

அறத்தா றழுங்கத்
தேற்றாதுசெய்வார்களைத்தேறுதல்செவ்விதன்றால்
மாற்றானெனத்தம்முனைக்கொல்லியவந்துநின்றான்
வேற்றார்கள்திறத்திலிவன் தஞ்சமென்வீர

[தருமநெறியைக்கெடுத்து நம்பத்தகாத காரியங்களைச் செய்கின்றவர்களை நம்புதல்நல்லதன்று. தன் தமையனுக்குப் பகைவனென்று அவனைக் கொல்வதற்கு வந்து நிற்கின்ற ஒருவன், வீரனே, மற்றவர்களுக்கு என்ன தஞ்சம் அளிக்கக்கூடும்]

என்று தனது வெறுப்பைத் தெரிவித்ததைக் கேட்ட இராமன் அக்காரியத்திற்குத் தான் உடன்பட்டதற்கோர் அமைதி கூறுங் கருத்தினனாகி,

விற்றாங்கு வெற்பன்ன விலங்கெழிற் றோளை மெய்மை
உற்றார் சிலரல் லவரேபல ரென்ப துண்மை
பெற்றாருழைப் பெற்ற பயன்பெறும் பெற்றி யல்லால்
லற்றார் நவையென் றலுக்காகுந ரார்கொல்.

[வில்லைத்தாங்கி யிருக்கின்ற ஒரு மலைபோன்று விளங்குகின்ற தோள்களையுடைய மைந்தனே,மெய்ம்மையை எய்தினவர் சிலராக,அன்னது எய்தாதவர்களேபலர் என்பது உண்மை. ஆகையால் கிடைத்தவரிடத்தில் கிடைத்த பயனைப் பெற்றுக்கொள்வதல்லாமல் குற்றமே இல்லாதவர் என்று சொல்வதற் குரியவர் யாருளர்]

எனச் சாற்றினானென்னுமொரு செய்தி கூறப்பெற்றிருக்கின்றது.* மெய்ம்மையுற்றார் சிலரேனும் உளர் என்னற் கிசைந்தான் இராமன்; சுக்கிரீவனோ ஒருவருமிலர் என் றுரைத்துவிட்டான். இத்துணை வேற்றுமையேனும் இவ்விருவருக்கும் இடையே இல்லாமை ஏற்காது. ஆயினுமச் சிறுவேற்றுமையால் இராமன் பெருமையடைவதற்குமில்லை. ஆதலின் இலக்குவன் "சுக்கிரீவனையும் என் அண்ணனையும் அன்றி வேறு யாரோ இத்தகைய நீதிகளை யெடுத்துப் பேசவல்லார்' என்று வியந்தது தக்கதேயாம். மனிதரிற் சில மேன்மையோர் கடவுள் நிலையைக் கைக்கொள்ள இயலும்; கடவுளோ மனிதனைப்போல் விவகரிக்க முயலுங்கால் குரங்கினளவு குறைபநேர்கின்ற கொள்கையைக் கம்பர் இங்குக் குறித்துவைத்தார்.

இதுகாறும் வான்மீகத்தால்வாய்த்த செய்தி; கம்பர்நூலில் இன்னும் சுக்கிரீவன் இலக்குவனுக்கெதிர் வந்ததில்லை. தாரைபேச்சின் சிறப்பினோடு, கற்கனியக் கனிகின்றதன் கைம்மையின் அமைதியாலும், இலக்குவன் சீற்றத்தைத்தணித்தபின் பதம்பார்த்துக் காத்திருந்த அனுமன் அருகுவந்து வணங்கி நிற்க, முனிவினிடையேயும் முனைக்கவல்ல அன்புடைய இலக்குவன்,"அளவற்றகேள்வியறிவுடையநீயுமோ முன்னே நிகழ்ந்தவைகளை மறந்தனை" என்னப் பகருமளவில், சொல்லில் வல்ல அவ்வனுமன், உதவி கொன்றார்க்குய்தியில்லைஎன்னும் வாய்மையைத் தான் அறிந்துளனென்பதைத் தெரிவித்து,

---

* இவ்விடயத்தின் விரிவை, 7-வது வால்யூம் 488-வது பக்கத்தில் காண்க.

ஐயநும் மோடு மெங்கள்
அரிக்குலத் தரச னோடும்
மெய்யுறு கேண்மை யாக
மேலைநாள் விளைவ தாய
செய்கையென் செய்கை யன்றோ
அன்னது சிதையு மாயின்
உய்வகை யெனக்கு முண்டோ
உணர்வுமா சுண்ட தன்றே.

[ஐயனே, உங்களுக்கும் குரக்கினத்தலைவனான எங்கள் சுக்கிரீவனுக்கும் உண்மையான சிநேகம் உண்டாகும்படி முன்னாள் ஏற்பட்ட செய்கை என்னுடைய செய்கையே யன்றோ. அந்த நட்புச் சிதையுமானால் அச்சிநேகத்தைச் செய்துவைத்தவனாகிய எனக்குந்தான் உய்கை உண்டோ! உணர்வென்பதற்கே இனி ஒரு பெருமையின்றிப் பழுது அடைந்ததாகுமே.]

என்னத் தன் தலைவன்குற்றத்தைத் தானும் ஏற்றுக் கொள்ளுங் குறிப்பினையுணர்த்தி, இலக்குவன் இன்னுஞ் சீற்றந் தணியானாயின் தமக்குவேறு அரணின்மையுந் தெரிவித்து, குரக்குப்படை திரட்டுமாறு தூதர்கள் போயிருப்பதையுஞ் செப்பிப் பகைவர் மார்பில் உதைத்து மாய்ப்பதற்கோ, மற்று, உதையுண்டு மாள்வதற்கோ அமைதியின் இருந்தனன் அச்சுக்கிரீவன் என்பதையும் அறைந்து, அச்சுக்கிரீவனுக்கு 'நீர் அளித்த செல்வத்தைவந்து காண்டி' என இலக்குவனை அழைப்ப,

மாருதி மாற்றங் கேட்ட மலைபுரை வயிரத்தோளான்
தீர்வினைசென் றுநின் றசீற்றத்தான்சிந்தைசெய்தான்
ஆரியனருளிற்றீர்ந்தானல்லன்வந்தடுத்தசெல்வம்
பேர்வரிதாகச்செய்தசிறுமையானென்னும்பெற்றி

[அனுமன் சொல்லிய அவ்வார்த்தைகளைக்கேட்ட, மலைபோன்ற வலிய தோள்களையுடைய இலக்குவன், கோபம் தணிந்தவனாகி, தனக்கு வாய்த்த செல்வம் தன்னைவிட்டு அப்பாற் போகவொட்டாமல் தடுத்தபடியால் தாழ்த்துக் கிடந்தானேயன்றி இக்கீழ்மையான் இராமனது பணியினின்றுகடக்கவேண்டுமென்றஎண்ணமுடையவனல்லன், என்பதைச் சிந்தித்தான்]

சிந்தித்துப் பின்ன ரவ் வனுமனைநோக்கி, "உனக்கு உணர்த்தவேண்டியன சிலவுள, கேள்" என இலக்குவன் கூறலுற்றான்.

"இராவணன் சீதைக்கு இழைத்த தீமையும் அதனால் தான் இழந்த மானமும் பற்றித்தீய்க்க அரிதின் ஆவிசோரும் இராமனது நிலையைக் கண்டேன். அதனைக்கண்ட நான், அரசதர்மத்தையும்விட்டுக் கொடுமையேபூண்டு, சுக்கிரீவனைப்போன்றபாவியர்களுக்கு ஏற்றகாரியத்தைச் செய்யவும் நினைப்பேன், அதனால் எனக்கு வரும்பழியும் பார்க்கமாட்டேன். ஆயினும் என்னை நானே ஒருவாறு ஆற்றிக்கொண்டு, இராமனைத் தேற்றுவதற்கே சிலநாட்கள் கழிந்தன. இல்லையேல், இந்தமூன்றுஉலகங்களுந் தீந்துபோம், தேவர்களும் இறந்தொழிவார், அன்றியும், சிறந்த தர்மங்களும் அழிந்தொழியும். இவ்வாறு நீங்கள் காலந் தாழ்ந்ததால்,

தாழ்வித்தீ ரல்லீர் பன்னா
டருக்கிய வரக்கர் தம்மை
வாழ்வித்தீ ரிமையோர்க் கின்னல்
வருவித்தீர் மரபிற் றீராக்
கேள்வித்தீ யாளர் துன்பங்
கிளர்வித்தீர் பாவந் தன்னை
மூள்வித்தீர் முனியா தானை
முனிவித்தீர் முடிதி ரென்றான்.

[நீங்கள் காலதாமதம்செய்தவர்மாத்திரம் ஆகமாட்டீர். பலகாலமாகச் செருக்குக்கொண்டிருக்கிற அரக்கர்களைப் பின்னும் வாழவைத்தீர். மரபினின்று விலகாத கேள்விப் பயனும் வேள்விச்செல்வமும் உடைய முனிவர்களுக்குத் துன்பத்தை அதிகப்படுத்தினீர். பாவத்தைச் சூழவைத்தீர். ஒருபோதும் கோபங்கொள்ளாத இராமன் கோபம் கொள்ளும்படிசெய்தீர். இதனால் நீங்கள் அழியவேண்டியவர்களா யிருக்கின்றீர்]

என்று சொல்லி முடித்தான். இத்தகைய சொற்களை மாருதி அல்லனேல் வேறுயாரே எதிர்நின்று ஆற்ற வல்லார்!

---

# ஒத்தெல்லோ

## ["Shakespeare's —"Othello"]

அங்கம் 2. களம் 1.

[263-வது பக்கத் தொடர்ச்சி]

ராடரிகோ :—நன்று.[1]

இயாகோ :—ஐயா, அவன் முன்பின் யோசிக்காதவன்; மிகக் கதுமெனக் கோபங்கொள்பவன்; உன்னை அவன் அடிக்கவும் நேரலாம்: அவன் அதனைச் செய்யுமாறு கோபமூட்டு[2]; ஏனெனில், இதனில் இருந்தே நான் இந்த ஸைப்ரஸ் தீவினராம் இவர்களைக் கலகம் செய்யவைப்பேன்; காஸ்ஸியோவைப் பெயர்த்துவிடுவதனாலன்றி வேறு எதனாலும் இவர் தணிவு மீண்டும் உண்மைச்சுவையை அடைந்ததாகாது[3]. அதன் பிறகு உன்னுடைய ஆசைகளை நான் விருத்திசெய்ய

(1) 'நல்லது, அதன்மேல் செய்யவேண்டியதைச் சொல்' என்று ராடரிகோ இயாகோவின் கருத்திற்கு இணங்குவதைக் குறிக்கின்றது.

(2) நான் சொன்னபடிகாஸ்ஸியோவைக் கோபமூட்டுவாயானால், முன்கோபியாகிய அவன் உன்னை அடித்தாலும் அடிக்கலாம். அப்படி அவன்உன்னை அடிக்கும்வரையில்நீ அவன்கோபத்தைத் தூண்டுவது நலம்—என்பதுபொருள்.

(3) காஸ்ஸியோ உன்னை அடித்த அச்சிறு செய்தியையே நிபமாகக்கொண்டு நான், இந்த ஸைப்ரஸ் தீவினர்கள் ஒத்தெல்லோவிற்கு விரோதமாகக் கலகம் செய்யும்படி தூண்டிவிடக் கூடும். பிறகு, காஸ்ஸியோவை வேலையைவிட்டு நீக்குவதல்லாமல் அவர்களைச் சாந்தப்படுத்த வேறு வழியில்லை—என்பது கருத்து. நோயுற்றவர்வாய்க்கு எல்லாம் சுவைகெட்டுத் தோன்றுவதுபோல், அமைதி கலைந்திருக்கும்போதுஎல்லாம் தம் தன்மைமாறித் தோன்றும்; எனின், தணிவு தன்சுவையை அடைவதென்பது, கலக்க நிலை நீங்கி அமைதி தனக்குரிய தன்மையோடு விளங்குதல்—எனப் பொருள்படும்.

வேண்டிய வழிகளால், நீ அவைகளை அடையும் பயணம் மிகக் குறுகியதாகும்[4]! இடையூறும் நலமுற விலக்கப்பட்டதாகும்; அது இன்றி நின் வாழ்வினை எதிர்பார்ப்பதற்கில்லை[5].

ராட:—அதனை ஏதேனும் சந்தர்ப்பத்திற்குக் கொணர்வாயாயின் அது செய்வேன் நான்[6].

இயா:—உறுதியாகச் சொல்கின்றேன்நானுனக்கு. சற்றுப்பொறுத்து என்னை நீ கோட்டையில் வந்து சந்தி. அவனுக்கு அவசியமானவைகளை நான் கரைக்குக் கொண்டுவரவேண்டும்[7]. போய்வா.

ராட:—போய்வருகின்றேன்.

[ராடரிகோ போகின்றான்]

இயா:—காஸ்ஸியோ அவளைக் காதலிக்கின்றான் என்பது, அதனை நான் நன்குநம்புகின்றேன். அவள் அவனைக் காதலிக்கின்றாளென்பது, அது தக்கதும் சால நம்பக்கூடியதுமாகும்[8]. இந்தமூரன்—அவனை நான் பொறுக்ககில்லே னாயினும்[9]— நிலைத்த புத்தியும் அன்பும் மேன்மையும் வாய்ந்தவன்; டெஸ்டிமோனாவிற்கு அவன் அருமைமிகு கணவனும் ஆவானென்று எண்ணத் துணிகின்றேன்[10]. இனி, நானுந்தான் அவளைக் காமுறுகின்றேன்.— வெறும் போக இச்சையினால் அன்று அது— ஒருகால் நான் அத்துணை பெரிய பாவத்திற்கும் கணக்காளியாக நிற்பினும் நிற்கலாம்—மற்று, கொழுத்த இம்மூரன் என்னுடைய இடத்திற் குதித்துளன் என்ற சங்கையுடையே னாகையினால் அப் பழியை உண்பதற்கே ஓரளவு செலுத்தப்படுபவனாகின்றேன்[11]. அதன் நினைவு, விடமுடைய லோகம்போல் எனது உள்ளிடத்தைக் கொந்திக் கொந்திக் கறிக்கின்றது[12]; மனைவிக்கு மனைவி அவனோடு நான் சமன்செய்துகொண்டாகின்றவரையில் வேறு எதுவும் எனது ஆன்மாவைத் திருப்திசெய்ய இயலவும் இயலாது, செய்யவும் படாது[13]. அல்லது, அப்படித் தவறினும், அறிவினது ஆராய்ச்சியாலும் ஆற்றமாட்டா அத்துணைவலியதொரு அவ்வியத்திலேனும் அன்னவனை யான் ஆழ்த்திய வரையிலேனும் ஆகட்டும்[14]. அது செய்ய, வேகமுடன் வேட்டையாடுகின்றானென்பது கருதி நான் தொடர்கின்ற வெனிஸ்நகரத்து இவ்வற்பக் குப்பை[15] பூட்டியதைத் தாங்கவல்லதாயின், நம் மைக்கேல் காஸ்ஸியோவை நான் இடுப்பில்இறுக்கிக்கொண்டவனாவேன்[16]; உறைக்கின்றகோலத்தில் நான் அவனைமூரனிடம் பழித்துரைப்பேன்[17];ஏனெனில், என்னுடைய இரவுக்குல்லாவுடன் நான்இந்தக் காஸ்ஸியேவையும் அஞ்சுகின்றேன்[18]; இப்படித் தன்னை ஒரு அசாதாரணக் கழுதையாக்கி, பைத்தியமே கொள்ளும்படி தன் சாந்தத்தையும் அமைதியையும் வஞ்சித்ததற்காக அம்மூரன் என்பால் நன்றி

(4) காஸ்ஸியோவை நீக்கியபின் நான்சில தந்திரங்கள் செய்வேன்; அதனால் நீ உன் ஆசையை விரைவில் அடையலாம்—என்பது பொருள்.

(5) இடையூறு- ராடரிகோ டெஸ்டிமோனாவை அடைவதற்குத் தடையாயிருக்கும் காஸ்ஸியோ. அது இன்றி - அவனை விலக்குவதில்லாமல். நின் வாழ்வு-நீ டெஸ்டிமோனாவை அடையும் ஆசை நிறைவேறுவது.

(6) நான் கலகம்விளைவிப்பது உன்னுடையசூழ்ச்சியை நடத்துவதற்கு ஒரு நல்ல சந்தர்ப்பமாய் அமையுமாயின் அப்படியே செய்யச் சம்மதிக்கிறேன்—என்பதுபொருள்.

(7) ஒத்தெல்லோவின் அவசியமான சாமான்களைக்கப்பலிலிருந்து கரைசேர்க்கவேண்டும்-என்பது பொருள்.

(8) காஸ்ஸியோ டெஸ்டிமோனாவைக் காதலித்துக் கைப்பற்றவேண்டுமென்னும்நோக்கமுடையவனாக இருக்கின்றான் என்பதிற் சந்தேகமில்லை. மற்று, காஸ்ஸியோவின் அழகு இளமை முதலியவைகளைக் கருதுங்கால் இவளும் அவனைக் காதலிக்கின்றாள்என்பது நம்பத்தகுந்தது ஒன்றேயன்றி வேறன்று—என்பது பொருள்.

(9) இந்த மூரனிடத்தில் நான் தாங்கமாட்டாதபொறாமையுடையவனாக இருந்தபோதிலும், அவனுடைய நல்ல குணங்களை ஒப்புக்கொள்ளாமல் தீராது—என்று அவைகளை மேலே சொல்லுகின்றான்.

(10) டெஸ்டிமோனாவினால் அருமையாகப் பாராட்டத்தகுந்த கணவனுமாவான்—என்பது பொருள்.

(11) காஸ்ஸியோ டெஸ்டிமோனாவைக் காதலிப்பது கிடக்க, எனக்குந்தான் அவளிடத்தில் காமமுண்டாகின்றது— என்கிறான் இயாகோ. ஆயினும் உடனே அதனைத் திருத்திக்கொண்டு, "அவள் நலத்தினைத் துய்க்கவேண்டுமென்ற ஆசையால் எழுந்தது அன்று இக்காமம்" என மாற்றுகின்றான். அவ்வாறு மாற்றுபவன் இடையேஅதனையுந் திருத்தி, "ஒருகால்அத்தகையஆசையே எனதுகாமத்திற்குக்காரணமாயிருந்தாலும் இருக்கலாம்" என்றுகூறிப் பின்னர், இறுதியாக, "என் மனைவியை ஒத்தெல்லோ கெடுத்திருக்கின்றான் என்ற சந்தேகம் எனக்கு இருப்பதால், அப் பழியைத் தீர்த்துக்கொள்ளும்பொருட்டு நான் அவன் மனைவியைக் கெடுக்கவேண்டுமென்ற நோக்கமே, டெஸ்டிமோனாவை நான் காமுறுகின்றேன் என்று கூறியதன் கருத்தாகும்"—என்று முடிக்கின்றான்.

கணக்காளி= உத்தரவாதம் சொல்லவேண்டியவன்; டெஸ்டிமோனாவைச் சேரவேண்டும் என்னும் விருப்பமே நான் கொண்ட இக்காமத்திற்குக் காரணமாக இருப்பினும் இருக்கலாம்—என்பது பொருள்.

மூரன் என் இடத்திற் குதித்துளன்=ஒத்தெல்லோ எனக்குப்பதிலாக எமிலியாவுடன் பள்ளிகொண்டுளன்—என்பது பொருள்.

அப்பழியை உண்பது=அப்பழியை உணவாக உட்கொள்வது என்னும் இது, பழிதீர்த்து இன்புறுவது எனப் பொருள்படும்.

செலுத்தப்படுபவன்=டெஸ்டிமோனாவைக் காமுறும்படி தூண்டப்படுபவன்.

(12) என் மனைவியைக் கெடுத்துளன் என்ற நினைவு என் மனத்தைக் கொந்திக் கொந்தி அரித்தவண்ணமாக இருக்கின்றது—என்பது பொருள்.

(13) அவன் என் மனைவியைக் கெடுத்ததற்கு மாறாக நான் அவன்மனைவியைக் கெடுத்து இவ்வகையில் நாங்கள் இருவரும் சமமாகின்றவரையில் எனதுமனம்திருப்தியடையாது, அடையும்படி நான் விடவும் மாட்டேன்—என்பது பொருள்.

ஆன்மா வென்பது அத் தத்துவப்பொருளைக்குறிக்காமல் இங்கு வெறும் மனதைக் குறிக்கின்றது.

(14) டெஸ்டிமோனாவைக் கெடுக்கமுடியாமற் போய்விட்டாலும், எவ்வளவு சிந்தித்தாலும் தெளியமாட்டாததொரு சந்தேகம் டெஸ்டிமோனாவிடம் ஒத்தெல்லோ கொள்ளும்படி செய்துவிடுவேன். அவ்வியம்=பொறாமை, தன்மனைவி வேறுஒருவனை இச்சித்திருக்கின்றாள்என்னும் சந்தேகம்.

(15) ராடரிகோவை வெனிஸ்நகரத்துக் குப்பையே என்று மதித்து இகழ்கின்றான். அவன் ஒருவேட்டைநாய் போல் நான் ஏவியபடி வேகமாகப்பாய்கின்றானாகையால் அவனை முன்செலுத்தி நான் தொடர்கின்றேன். இவன் மேல் நான் சுமத்துவதையெல்லாம் இவன் தாங்குவானே

வைத்து அன்புகூர்ந்து எனக்கு வெகுமதியளிக்கும் படிசெய்வேன்[19]. இங்கு உளது அது. ஆயினும்இன்னும் குழம்பியே யிருக்கின்றது: உபயோகப்படுத்துகின்றவரையில் கைதவத்தின் தெளிவான முகம் தென்படுவதில்லை[20].

[போகின்றான்

---

### அங்கம் 2. களம் 2.

இடம்:—ஒரு வீதி.

*விளம்பரம்செய்வோன் ஒருவன் சில சனங்கள் பின்தொடர வருகின்றான்.*

விளம்பரம் செய்வோன்:– துருக்கியர் கப்பற்படை முற்றிலும் படுநாசமானதுபற்றி இப்பொழுது வந்த சில வதந்திகளின் காரணமாக, ஒவ்வொருவனும் வெற்றிக் கொண்டாட்டங்களைக் கைக்கொள்ளல் வேண்டு மென்பது, பெருமை சான்ற வீரமுடைய நம் படைத்தலைவராம் ஒத்தெல்லோவின் இஷ்டம். சிலர் நடனங்கள் புரியட்டும், சிலர் தீபோத்ஸவங்கள் செய்யட்டும்; அவரவர் இச்சைகள் செலுத்துகின்ற விளையாட்டுக்களையும் களியாட்டங்களையும் ஒவ்வொருவரும் மேற்கொள்ளட்டும். ஏனெனில், இந்த இலாபகரமான செய்திகளையுந் தவிர, இது அவருடைய திருமணக் கொண்டாட்டமு மாகும். இவ்வளவும் விளம்பரம் செய்யவேண்டுமென்பது அவருடைய இஷ்டம். எல்லா அதிகார நிலயங்களுந் திறந்திருக்கின்றன; இப்பொழுது ஐந்து மணியிலிருந்து, மணி பதினொன்று அடித்தாகிறவரையில் தடையின்றி விருந்துண்டு அயர அனுமதியிருக்கின்றது. இந்த ஸைப்ரஸ் தீவையும், நமது மேன்மை சான்ற படைத்தலைவர் ஒத்தெல்லோவையும், விண்ணவர் வாழ்த்தட்டும்.

[எல்லோரும் போகின்றார்]

யானால் பிறகு நான் காஸ்ஸியோவை என் சூழ்ச்சியினுள் இறுக்கி அழித்துவிடக்கூடும்—என்பது பொருள்.

நாயென்றும் குப்பையென்றும் கழுதையென்றும் ராடரிகோ இங்கு இயாகோவினால் ஒருங்கே உருவகம் செய்யப்படுகின்றான்.

(16) குஸ்திச்சண்டையில் எதிரியின் இடுப்பை இறுகப் பற்றி வீழ்த்துவதுபோல் நான் மைக்கீல் காஸ்ஸியோவைத் தப்பமாட்டாவகை தள்ளிவிடுவேன்—என்பது பொருள்.

(17) காஸ்ஸியோவின்மீது வேகமான கோபம் உண்டாகும்படி அவனை நான் ஒத்தெல்லோவிடம் பழிபட வருணிப்பேன்—என்பது பொருள்.

(18) இரவுக்குல்லா என்பது, இரவில் படுகைக்குச் செல்லும்போது அணிகின்ற உடையைக் குறிக்கின்றது. காஸ்ஸியோவும், எனக்குப் பதிலாக இரவில் என் மனைவியுடன் எனது படுக்கையைச் சேர்வான் என்ற சந்தேகமும் எனக்கிருக்கின்றது—என்பது பொருள். இயாகோ போன்ற கீழ்மக்களுக்கு எல்லோரிடத்திலும் இவ்வகைச் சந்தேகம் கொள்வது இயற்கை. காஸ்ஸியோவை இவன் நாசமாக்கப் புகுவதற்கு இதனை ஒரு காரணமாகக் கூறுகின்றான். இந்த அச்சத்திற்கு, முன் காஸ்ஸியோ எமிலியாவை முத்தமிட்டது ஆதாரமாகலாம்.

(19) அசாதாரணக் கழுதை - என்னால் இவ்வளவு எளிதில் வஞ்சிக்கப்பட்டு, அது தெரியாமல், நான் நன்மையே செய்ததாக மதித்து எனக்கு நன்றியும் செலுத்தப் புகுகின்ற அசடன்—என்பது பொருள். நான் டெஸ்டிமோனாவின்மீது கிளப்பிவிடுகின்ற சந்தேகத்தால் ஒத்தெல்லோ தன் மனஅமைதியை இழந்தவனாவான்-இதுவே நான் அவனுக்குச் செய்யும் நன்மை.

(20) 'இங்கு உளது அது'—"நான் செய்யச் சூழ்கின்ற வஞ்சனை, என் தலையில் இருக்கின்றது" என்றுதன் தலையை விரலால் தட்டிக் காட்டுகிறான். ஆயினும் இப்படித்தான் செய்யவேண்டுமென்ற வழி இன்னும் தெளிவாக ஏற்படவில்லை, என்கின்றான். கைதவம் - மோசம், வஞ்சனை. செய்ய உத்தேசிக்கின்ற மோசத்தை நடத்திவைக்கின்றபொழுதுதான் அது தெளிவாகத் தோன்றத்தலைப்படும்-என்பது பொருள்.

---

### அங்கம் 2. களம் 2.

துருக்கர்படை புயலில் அகப்பட்டு அழிந்துபோனது பற்றியும், ஒத்தெல்லோவின் கலியாணத்தை ஒட்டியும் எல்லோரும் உவகை கொண்டாடவேண்டுமென்று ஒருவனால் பொதுவிளம்பரம் செய்யப்படுகின்றது. அதிகார நிலயக் கட்டிடங்களை இவ் விளையாட்டு விழாவிற்கு உபயோகப்படுத்திக்கொள்ள அனுமதி இருக்கின்றதென்றுங் கூறுகின்றான்.

---

# காலத்தொனி

[271-வது பக்கத் தொடர்ச்சி]

அநேக ஆயிர ஆண்டுகள்முன், பனிக்கட்டிகள் நிரம்பிய மலைகளாலும், மரங்களும் நரபக்ஷிணிகளும் செறிந்த காடுகளினாலும் சூழப்பட்ட ஓர் இடத்தில் ஆதி மனிதன் நிச்சிந்தனையுடன் வீற்றிருந்ததாகப் பாவிப்போம். சூரியன் ஆகாய வெளியில் ஓடி மத்தியில் வரவே உஷ்ணம் அதிகரிக்கின்றது; அம்மனிதனுள் பசியும் தாகமும் எழுகின்றன; வேண்டிய உணவும் பானமும் அளித்து உதவக்கூடிய "அக்ஷயபாத்திரம் ஒன்றும் முன்வருவதில்லை. சுயமுயற்சியினாற்றான் அவைகளை அவன் பெறல்வேண்டும். இதனிமித்தம் நாலாபக்கங்களிலும் ஓடித்திரிந்து காய்கனி கிழங்குவர்க்கங்களைப் புசித்து அருவிகளினின்று நீர் குடித்து மீண்டும் உட்கார்ந்துவிடுகின்றான். ஆனால், சுற்றிலும் உள்ளவைகள் இயங்கிக்கொண்டே யிருக்கின்றன. சூரியாஸ்தமனமாகவே, இருள் குவிகின்றது; துஷ்ட மிருகங்கள் வெளி உலாவுகின்றன; குளிர்ச்சி அதிகரிக்கின்றது. குளிரைப் போக்கப் போர்வை வேண்டும், மிருகங்களினின்று தப்பிப்பிழைக்க ஓர் கட்டிடம்வேண்டும். ஆதலால், மரங்களின் உச்சியிலோ, குகைகளிலோ, அல்லது பள்ளத்தாக்குகளிலோ வதிந்துஉறங்குகின்றான். மாரிகாலத்தில் மழைபெய்கிறது. கடுங்கோடையில் மரங்கள் பட்டுப்போகின்றன. வேண்டியகாய்கனிகள் எப்பொழுதும் ஒரே படித்தாகக் கிடைப்பதில்லை. இவ்வனுபவங்களெல்லாம் மனத்தையும் உடலையும் இயக்குகின்றன. ஆதலால், படிப்படியாக விவசாயமும் விவசாயக்கருவிகளும், வேட்டையும் வேட்டைக்கான ஆயுதங்களும், இல்லங்களும் கிராமங்களும் உண்டாகி வியாபிக்கின்றன! இவைகளினுடன் ஆசைகளும் தேவைகளும் பற்றுக்களும் செழிக்கின்றன; இவைகளினின்று வழக்குகளும் சண்டைகளும்

இவைகளையடக்கப் பஞ்சாயத்துக்களும் இராஜாங்கமும், உண்மை அறிந்து தக்கன செய்தற்குக் கல்விப் பயிற்சியும் தோன்றுகின்றன. நாளேற நாளேறத் தனமும் தரித்திரமும், அடிமைத்தனமும் சுதந்திரப்பிரியமும், பொய்யும் தந்திரங்களும் புரட்சியும் போரும் மலிகின்றன.

ஆரம்பத்தில், கொடியபெரும் சத்துருவாகத் தோன்றிய இயற்கை உலகும் உலகாதிகளும் நாள் செல்லச்செல்ல நல்ல தோழர்களாக மாற்றப்பட்டுவருகையில், செயற்கையுலகில், (அதாவது மானிட நாகரிக ராஜ்யங்களில்) பல்வேறுதிறப் பகைவர்கள் கிளம்புகின்றனர். அவநம்பிக்கையும் பிணக்கமும் பரஸ்பரத் துவேஷமும் பிரபலமாகின்றன. கடைசியில், குழப்பமும் கலகமும் யுத்தமும் பரவுகின்றன. தேகம் வளர வளர அங்கிகளை மாற்றுதல்போல், மனத்தேர்ச்சியும் கருத்துக்களும் உயர வுயரச் சமூகச் சம்பிரதாயங்களும், ராஜாங்கச் சட்டங்களும் முறைகளும் திருத்திப் புதுப்பித்து மாற்றப்படவேண்டும். இல்லையேல், நாளுக்கு நாள் உரம்பெற்றுப் பெருக்கும் தேகமானது, தன்னை இறுகக்கட்டிப் பிடிக்கும்படி சிறுகிக் குறுகிய உடைகளைக் கழித்துதறுதல்போல், சீரிய மனப்போக்கும் துல்லியசிந்தனைகளும், ஆழ்ந்துபரந்த ஆதர்சங்களும் தம்முடைய மேலேற்றத்தைத் தடுத்தடக்க முயற்சிசெய்யும் சமூகநியதிகளையும் ராஜாங்கமுறைகளையும் எதிர்த்து உருட்டி வீழ்த்துகின்றன.

இல்வாழ்க்கை நீடிப்பதற்கும் மாந்தர்தம் சிறப்பிற்கும் இணக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் இன்றியமையாத வாய்மை தூய்மை பரஸ்பர நம்பிக்கை உடனுறுதி மனத்தெளிவு தைரியம் பரோபகாரசிந்தனைகள் ஆகியவைகளை விருத்தி செய்வதற்கே சங்கங்களும் ராஜாங்கங்களும் உண்டாயின. நம்முடைய தேவைகளைப் பூர்த்திசெய்தற்காகச் சங்கங்கள் எழுந்தன; நீசத்வத்தைப்போக்கி, மூர்க்கத்தனத்தைக் குறைத்து நம்மைத் திருத்தி உயர்த்துவதற்காக ராஜாங்கங்கள் ஏற்பட்டுள்ளன. மாந்தர்களுக்குள் அந்நியோந்நியப் பழக்க வழக்கங்களும் அன்புஇன்பங்களும் சமாதானமும் உரமுற்றுப்பெருகுதற்குக் காரணமும் துணையுமாவது முன்னது; தீக்குண வொழுக்கங்களைப் பற்பல உபாயங்களால் செம்மைப்படுத்திப் பரஸ்பர நம்பிக்கையையும் ஒற்றுமையையும் விருத்தியாக்கி, வாழ்க்கையை உற்சாகத்துடனே நடத்தச்செய்வது பின்னதாகும்.

எனினும், நாளேற நாளேற, சகாயிகளாகவும் போஷகர்களாகவும், மேல்வரிச் சட்டங்களாகவும் திகழவேண்டிய இச்சமூகமும் அரசும் தம்முடைய கடமைகளைக் கைவிட்டு இறுமாப்புற்று, "உயர்வு தாழ்வு," "மேல் கீழ்," "தனம் தரித்திரம்," "முதலாளி தொழிலாளி" என்ற பேதங்களையும் வரம்புகளையும் வகுப்புக்களையும் கற்பித்து, மாந்தரிற் பெரும்பாலோரைவதைத்து அழிக்கும்குரூபிகள் ஆகின்றன. "உண்மையில், உடலின் களங்கங்களையும் குறைகளையும்மூடும் நானாவித உடுப்புக்கள்போல், உள்ளே கிடக்கின்ற புல்லிய குணநடத்தைகளை மறைக்கும் போர்வைகளாகவே இவை தோன்றுகின்றன." இன்னும், "நாகரீக உலகில்' ஒவ்வொரு ஜாதியாரின் மனப்போக்கையும் தன்மையையும்கொள்கைகளையும், அவரவர்களுடைய நடை உடை பாவனைகள் மூடியுங் குறிப்பிட்டும் வருதல்போல், சிற்சில மிலேச்சர்களின் இழிவையும் இடம்பத்தையும் பற்றுக்கோடுகளையும் இராஜாங்க முறைகளும் சங்க விதி விலக்குக்களும் மறைத்தும் விளக்கியும் நிற்கின்றன.

பெருங் கவிகளும் தீர்க்கதரிசிகளும் வித்தகரும் லளித வித்தையரும் "புராதனம்," "சமூக ஆக்ஞை" என்ற மண்பதுமைகளுக்கு அடிமையாகாமல், சுய விசாரிப்பினாலும் விசால நோக்கத்தினாலும் நெடும் பார்வையினாலும், சத்தை உண்மையாகத் தெளிந்து உணரவேண்டுமென்ற ஓர் ஆர்வத்தினாலும் தூண்டப்பட்டு, இடையூறு இடுக்கண்களைச் சிறிதும் பொருட்படுத்தாமல் மீட்டுமீட்டும் பலவித ஆராய்ச்சிமுறைகளைப்பற்றி யொழுகினர் என்ற விஷயத்தை நாம் எல்லோரும் அறிந்தும், அப்பதுமைகளுக்கு அடிமையாகி, போனநாட்களுக் கிரங்கி வரும்நாட்களை மிக்க ஆவலுடன் எதிர்பார்த்துத் தற்போதையவைகளை அலக்ஷியஞ்செய்து, ஒரு வழியையும் பற்றாமல் நீண்ட பிரசங்கங்கள்செய்து விவகரிப்பதில் சிறப்பும் பயனும் ஒன்றுமில்லை. அன்பின்புகளைக்கொல்லும்விஷயாதிகளையும், பரஸ்பர ஐக்கியத்தையும் நம்பிக்கையையும் சீரையும்சிதைக்கும்பாவனைகளையும், வாழ்க்கையூற்றை விஷக்குட்டையாக்கும் காரியங்களையும் ஏற்று இருபிறப்புக்களிடையில் அலைந்து அவதிப்படுதல் விவேகத்தின் அறிகுறியன்று. அடிமைத்தனமாகிய படுகுழியில் உருட்டித்தள்ளியமுழுத்தும் கல்வி கல்வியாமோ?

வயிற்றின்பொருட்டு ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு தொழிலை யேற்றுப் புரியவேண்டியிருக்கின்றது. ஊழியத்திற்குப் பொறுமையுடன் சுறுசுறுப்பும் பலமும்விவேகமும் பிரதானமென்றவிஷயத்தைவால்மீகியும் ப்ளேடோவும் நமக்குப் போதிக்கவேண்டியதில்லை. அவ்விஷயத்தைப்பிரகிருதியின்போக்கேநினைவூட்டுகின்றது. சுய சுக போகங்களைப்பெற்றுத் துய்த்தற்கான உபாயங்களை எபிக்டடஸூம் ஏசுகிறிஸ்துவும் புகட்டவேண்டியதில்லை. மிடிநோய்களும், வலிவருத்தம் ஏக்கங்களும், பிறர் அவமதிப்பும், குடும்ப பாரங்களும் கவலைகளுமே பாமரர் பண்டிதர் அனைவரையும் தூண்டி யெழுப்பி ஓயாமல் உழைக்கச்செய்கின்றன. இவ்விதமில்லையாமாயின், மாந்தரிற் பெரும்பாலரின் கதி யாதாகுமென்பது, தனவான்கள்கொடுங்கோலரசர்கள், போகிகள், சதா வழக்குத்தொடுப்பவர்களின் வாணாட்களின் போக்கினின்று நாம் நன்கறியலாம். விழிப்புநிலையைவிட உறக்கமும், நனவைக்காட்டிலும் கனவும் தொழில்களைத் தாம் ஏற்றுச் செய்வதற்குப் பதிலாகப் பிறரை வஞ்சித்து அடிமைப்படுத்தி ஹிம்சித்து உழைக்கச் செய்தலுமேதான் வாழ்க்கையின் மிக்க மேலான சாதனமென்னப் பாவிக்கும் வீணர்களையும் விடர்களையும் பொருட் செல்வவந்தர்களையும் கண்டித்துச் செம்மைப்படுத்தி, ஏனையோர்களின் சகித்தற்கியலாத அவதிகளைப்போக்க, அல்லது மட்டுப்படுத்தற்கேதான் சங்கங்களும் அரசும் ஸ்தாபிக்கப்பட்டு அவ்வப்போதைய தேவைகளுக்கு ஆனபடி திருத்தி மாற்றப்பட்டு வருவன.

இராஜாங்கத்தின் முடிபு வித்தகமாகும்; வித்தகத்தின் அஸ்திபாரம் இராஜாங்கமாகும். இவைகளைப் பிணைப்பன விஞ்ஞான சாஸ்திரமும் மதமுமாகும். இவைகளிலொவ்வொன்றும் மற்றவைகளுக்குத் துணையாகவும் தூண்டுகோலாகவும் விளங்குவன; ஒன்

றின் உயர்வும் தாழ்வும்மற்றவைகளின் உயர்வையும் தாழ்வையும் பொறுத்திருக்கின்றன. இவைகளில் ஏதேனுமொன்று மும்முரித்து மற்றவைகளினின்று பிரிந்து கொக்கரிக்கத் தலைப்படுமாயின், குழப்பமும் அநீதியும் கலகமும் போரும் பிரபலமாகும்.

உயரிய சிந்தனைக்கும், சாத்வீக நடத்தைக்கும், ஞானச்செறிவிற்கும், ஆனந்தஉணர்ச்சிக்கும் உள்ளாராய்ச்சி அல்லது சுய விசாரிப்பு இன்றியமையாதது; இதற்குநிர்மலத் தியானம் ஆதாரமாகும்; இதற்கு ஏகாந்த வாழ்க்கை துணையாகும். இவ்வேகாந்த வாழ்க்கையானது நானாவித ஆசா பாசங்களும் அவலக் கவலைகளும் ஒழிந்தபின்னரேதான் சாத்தியமாகக்கூடும். ஆசைகளும் கவலைகளும் பற்றுக்களும் பலதிறக் கல்வி கேள்விகளினாலும் சுய அநுபவங்களினாலுமேதான் ஒழிவன. இதற்குப் பொருளும் வசதிகளும் பிரதானமாவன. இவைகளினிமித்தம் ஒவ்வொருவரும் அவ்வவர்க்கான தொழிலை மேற்கொண்டு இயற்ற வேண்டும். எனினும், தொழில்கள் அவர்களுடைய தேக சக்தியையும், மனோ வளர்ச்சியையும், உள்ளக் கிளர்ச்சியையும் விருத்திசெய்வதற்கு வேண்டிய சந்தர்ப்பங்களையும்ஒழிவையும் அளிக்கக்கூடியனவாயிருக்க வேண்டும். இவ்வாறில்லாமல், ஒவ்வொரு நாளின் பெரும்பகுதியும் உதர நிமித்தம் கழிக்கப்படுமாயின், தேகபலங் குன்றி, மனங் குவிந்து, இதயம் பாழடைந்து, மானுடத் தனத்திற்கே தீமை ஏற்படுகின்றது. திருடர்க்குங் கீழான சுய சுகபோகிகளையும், கொலைஞருக்குங் கடையராகிய "தனவான்"களையும் திருத்திச் சோம்பலைத் துடைத்து, வாழ்க்கைக்கு அவசியமான அன்ன பானங்களையும், வீடுகளையும், மனப் பயிற்சியையும் மாந்தரனைவரும் பெற்று, பின் அவரவர் மனோவமைப்பிற்கும், போக்கிற்கும், தேர்ச்சிக்கும், கருத்துக்கும் ஏற்ற கலைகளைத்தெளிந்து பற்றித் தொடர்ந்து உய்தற்காகவேதான் சங்கங்களும் இராஜாங்கங்களும் நிறுவப்பட்டிருப்பன.

"உலகம் மித்தை; உலகவாழ்க்கை நீர்க்குமிழிபோன்றது;நாரியர் விஷஜந்துக்கள்;தேகமானது பாபமும் தீமைகளும் நிரம்பிய கேணி," எனக் கழறும் தத்வங்களையும், மூடபக்தியையும், குருட்டு ஆசாரங்களையும் வீண் கர்மங்களையும், "பொறுத்தவர் பூமியாள்வார், இப்பொழுது இவ்விடத்தில்கஷ்டப்படுவார்கள்பின் (துஞ்சியபின்) மற்றோரிடத்தில் (சொர்க்கத்தில்) ரமிப்பார்கள்." "உயர்ந்தோர்களை எக்காரணத்தை முன்னிட்டும் எவரும் எதிர்க்கவுங்கூடாது. சமூகச்சம்பிரதாயங்களுக்கு முரணாக ஒருபொழுதும் நடக்கக்கூடாது. இச்செயல்கள் தெய்வாக்ஞைக்கும் முறைக்கும் விரோதமானவைகள்" என்னப் பறையறையும் மதங்களையும் பெயர்த்தெறிதல் தீமையன்று. "மதம், "சமயம்" என்றபதங்களின்பொருளை ஊன்றிப்பார்த்துத் தெளிவோமாயின், அவைகளை நாம் எவ்விதங்களில் எவ்வளவுதூரம் நம்பிப் பற்றி உய்யலாம் என்பதும் உய்யக்கூடும் என்பதும் புலனாகும்.

தன்னம்பிக்கையும், நன்னம்பிக்கையும், அகப்புறவாராய்ச்சியும், இதற்கானகல்வியும், இதற்கு உரிய பொருளும் வசதியும், இவைகளுக்கான நற்றொழில்களும்,இவைகளுக்கான நற்றொழில்களும், இவைகளுக்கேற்றஊதியமு மில்லாமையினாலன்றோ மக்களனைவரும் நெட்டுயிர்த்து மாய்கின்றனர்! லௌகீக வாழ்க்கைக்கு இன்றியமையாத சாதனங்களையும் பொருள்களையும் சிலநூற்றுவர் தம்வசப்படுத்திப் பலவாயிரம் பேர்களைத் தம் தேகம்வியர்க்க, இடுப்பொடிய, மனம் பதற, உள்ளந் துடிக்க உழைக்கச் செய்து, அத்துர்ப்பாக்கியர்களுக்குக் கந்தையும் அரைவயிற்றுக் கஞ்சியுமளிக்காது, பற்பல தண்டனைகளாலும் அபராதங்களாலும் அச்சுறுத்தி அடக்கித் தாம்மாத்திரம் மிக ரமித்துக் கொழுத்துப் புரளுகின்ற துரான்மாக்களை என்னவென்று இகழ்வது! எப்படித் தடுப்பது! தம் கடமைகளைப் புறத்தே போக்கி உரிமைகளையே வற்புறுத்தும் துச்சலுச்சர்கள் மிக்க சிரமத்துடன் சுய நன்மைக்காக வெழுப்பிய "மனோகர மாளிகை"யே ஆரம்பத்தில் யாம் குறிப்பிட்ட நாகரீக உலகம் போலும். விபரீத அந்நாகரீகத்தை அக்கயவர்கள்போற்றிமென்மேல் அதுதான் வளர்ந்து எங்கும்வியாபிக்கும் பொருட்டு, மாந்தரின் உயிர்த்தோழராக விளங்குவதும் விளங்கக் கூடியதுமாகிய கலைகளை யெல்லாம் திரித்துக் கொலை களவு போர்களை மலியச் செய்யுங் கருவிகளாக அவைகளை மாற்றி, மோசமாகிய காரிருளால் மாந்தருலகை மூடி, அழிவாகிய குட்டையில் ஏழைகளை அழுத்திவருகிறார்கள். எனினும், தூய்மை நேர்மை பரஸ்பரவாசம் சுயநலப் பற்றின்மை கல்வியறிவு ஆத்மார்ப்பணம் என்ற துளிகள்நிரம்பிய தண்ணீரானது அக்குட்டையைச்சுத்தப்படுத்தும்-ஆனால், தாமாக அவைகள் ஒருபொழுதும்வெளிப்படா. சுய முயற்சியினாலும், சோர்வுறாவூக்கத்தாலும், தளராத ஆர்வத்தினாலும்,பின்னிடாததைரியத்தினாலும்சலிக்காத நம்பிக்கையினாலும் மங்காத உல்லாசத்தினாலுமேதான் அவைகளை நாம் எழுப்பிப்பரப்பவேண்டும். இவ்வாறு செய்வதற்கு வேண்டிய திறமை ஒவ்வொருவருள்ளும் உறைந்து கிடக்கின்றது.

---

## நரவாகன தத்த சரிதம்

[270-வது பக்கத் தொடர்ச்சி]

### சானுதாசன் கதை

**சா**னுதாசனும் நரவாகனனும்உண்டபின்னர்வார்த்தையாடிக்கொண்டிருக்கையில் சானுதாசன் தன் வரலாற்றைப் பின்வருமாறு கூறினான்:-இந்தச்சம்பா நகரிலேவணிகர் தலைவனாகஎன்பிதா'இருந்தார். அவர் பெயர் மித்திரவர்மன். தாய் மித்திராவதி எனப்படுவாள். நான் இளமையில் சீலமும் ஒழுக்கமும்உடையவனாகஇருந்தேன். என்னுடையநண்பர்பலருள் துருவகன் என்பவன்என்னோடுகூடிக் குடிக்கவும் பரத்தையர் சேரியிற் புகவும் பழக்கினான். அவ்விடத்தில் கங்காதத்தை என்றபரத்தையோடு பழகிவந்தேன். ஒருநாள் என் பிதா இறந்துவிட்டதாயும் அவனுடைய இடத்திற்கு அரசன் என்னை நியமித்திருப்பதாயும் செய்தி வந்தது. நான் கங்காதத்தையைத் துறந்து வீடு சேர்ந்து எனக்குரிய வேலைகளைக் கவனித்துவந்தேன். இவ்வாறு ஒழுங்காக நடந்துவருகையில் ஒருநாள் துருவகன் என்னிடம் வந்து கங்காதத்தை மிக்க துன்பப்படுவதாயும் ஒருநாள் கண்ணாலாவது

கண்டால் தன் துயர் தீருமென்று அவள் கூறுவதாகவும் அவ்வாறு செய்யவேண்டியது என் கடமையாகுமென்றும் மன்றாடினான். நான் அவனுடைய வேண்டுகோட்கு இணங்கி அவளது இல்லிற்குச் சென்றேன். பழய மாதிரியில் தொடங்கிக் கையிலுள்ளபொருளையெல்லாம் இழந்தேன். தாய்க் கிழவி என் கையிற் காசில்லை என்று கண்டவுடன் வீட்டைவிட்டு விரட்டிவிட்டாள். வீட்டிற்குத் திரும்பிவந்து பார்த்தேன். என்னுடைய வீடு விற்கப்பட்டுப் பிறனுடைய வசத்திலிருக்கக் கண்டேன். என்னுடைய தாயும் மனைவியும் ஏழைகள் குடியிருக்கும் தெருவில் இருப்பதாகக் கேட்டு அவர்களைக் காணச் சென்றேன். என் மகன் உணவின்மையால் உருத்தெரியா வண்ணம் மெலிந்து தெருவில் விளையாடக் கண்டேன். இவ்வளவு ஏழ்மைத்தன்மையிலிருப்பவர்களோடு நானும் சேர்ந்து துன்புறுத்துவது தகுதியல்லவென்றெண்ணி ஒரு இரவு தங்கி மறுதினம் தாமரலிப்பட்டியில் செல்வவந்தனாக வாழ்ந்திருந்த என் மாதுலனைக்கண்டு மறுமுறை வாணிபம் செய்வதெனத் தீர்மானித்தேன்.

'இரவு நீங்கிப் பொழுது புலர்ந்தது. தாமரலிப் பட்டி நோக்கிப் பிரயாணமானேன். அன்றிரவு வழியில் ஓர் ஊரில் தங்கி இரவு உணவுக்காக ஒரு வீட்டிற்குச் சென்றேன். அந்த வீட்டுக்காரன் என்னிடம் முன்னம் வேலையாளாக இருந்தவன். என்னைக் கண்டு பரிதாபப்பட்டு, மறுநாட்காலையில் தாமரிலிப் பட்டிக்குச் செல்லும் தன்னுடைய வணிகச்சாத்தோடு (Caravan) நானும் செல்லலாமென்று கூறினான்.

'அந்தவணிகச்சாத்தோடு நானும் செல்லும்போது காட்டுவழியில் கள்ளர் எங்களை வழிமறித்து அடித்துத் துன்புறுத்தினார்கள். நான் அவர்களைத் தப்பியோடப் பல கஷ்டங்களையனுபவித்து முடிவில் தாமரிலிப்பட்டியடைந்து எனது அம்மானைக்கண்டேன்.

'அவர் என்னை அன்புடன் வரவேற்று வேண்டுந் திரவியங்களை எடுத்துக்கொண்டு மறுபடி சம்பாநகர் சென்று சுகமாக வாழும்படி கூறினார். நான் அவருடைய அன்னத்தைச் சாப்பிட மனங்கொள்ளவில்லை. ஆனால் அவ்வூரினின்றும் கடற்பயணம் புறப்பட்ட ஒரு வணிகனுக்கு இரத்தினப் பரீக்ஷகனாக அமர்ந்து கப்பலேறினேன். கப்பல் சென்றுகொண்டிருக்கையில் நடுக்கடலில் கப்பல் உடைந்தது. நான் தெய்வாதீனமாய் ஒரு தீவிற் சேர்க்கப்பட்டேன்.

'அந்தத் தீவிலே என்னைப்போலக் கப்பல் சேதத்தினால் தாக்குண்டு அலையினால் ஒதுக்கப்பட்ட பெண்ணொருத்தி களைத்துக் கிடக்கக்கண்டேன். அவளைக் களை தெளிவித்து அவளுடைய சரித்திரத்தைச்சொல்லச் சொன்னேன். அவள்பெயர் சமுத்திரதின்னா என்றும் அவள் தகப்பன் பெயர் சாகரன் என்றும் தாய் பெயர் யாவானி என்றும் அவர்கள் இராசக்கிருகத்தைச் சார்ந்த வணிகரென்றும் கூறினாள். சாகரனது பெண்ணான தன்னைச் சம்பாநகரில் பெரிய வணிகனான மித்திரவருமன் தனதுமகனுக்கு மணஞ் செய்துகொடுக்கவேண்டுமென்றுகேட்டிருந்ததாயும், அந்தமித்திரவர்மன் இறக்கவே அவன்மகனானசானுதாசன் காமாதுரனாகித் தன்பொருளையெல்லாம்பரத்தையர்க் கழித்துவிட்டு வணிகச்சாத்தோடு பொருள் தேடும் நோக்கத்தோடும்போகையில் கள்வரால் கொலையுண்டானென்று கேட்ட தன் பெற்றோர்கள் துயரடைந்து இனி இராசக்கிருகத்தில் இருப்பது தகுதியன்று என்று கண்டு தனது தாய் பிறந்த தேசமான யவனதேசத்தை நோக்கிப் புறப்பட்டனர். கடலில் மரக்கலம் உடையவே அவர்கள் இறந்தனர். அவள் மாத்திரம் அலைகளால் இந்தக் கரையில் ஒதுக்கப்பட்டதாகஎனக்குக் கூறினாள். நானே அந்தச் சானுதாசன் என்று கூறினேன். அவள் பின்னும் பல கேள்விகளைக்கேட்டாள். அவற்றிற்கு விடையிறுத்த பின்னர் அவளுக்கு நம்பிக்கை பிறந்தது. அன்றிரவு பெரிய புயற்காற்றடித்தது. அதனாலே பல பண்டங்களும் மீன்களும் பழங்களும் அலையினால் கரையில் ஒதுங்கின. கரைவந்தமரம் முதலியவற்றைக்கொண்டு ஒரு குடிலமைத்துக் கிடைத்ததை வைத்துக்கொண்டு நாங்கள் பிழைத்துவந்தோம்.

'ஒரு நாள் கடலிற் செல்லும் மரக்கலம் ஒன்று கரையில் எரிந்த வெளிச்சத்தைக்கண்டு கரையோரம் வந்தது. அதிலிருந்த ஒரு வணிகன் மித்திரவர்மனை அறிந்தவனாகையால் கடலில் தப்பிய அவ்விருவரையும் தன் மரக்கலத்தில் ஏற்றிச்சென்றான். சமுத்திரதின்னாவை அவன் தன் மகள்போல் பாவித்து எனக்கு மணஞ்செய்து கொடுத்தான். என் மனைவி நாங்கள் தீவிலிருந்தபோது ஒதுங்கிய சிப்பிகளிலிருந்து எடுத்த முத்துக்களை எல்லாம் சேமித்து வைத்திருந்தனள். நடுக்கடலில் மறுபடியும் காற்றினால் கப்பல் உடைந்தது. நான் கரையில் ஒதுக்கப்பட, எனது மனைவி நீரோட்டத்தில் அகப்பட்டாள். கப்பலுடைந்ததால் என் மனைவி இறந்துபட்டாள் என்று நான் நினைத்தேன். பல நாள் அலைந்து திரிந்து ஓர் ஊரை அடைந்தேன். அந்த ஊரில் எல்லோரும் மிலேச்ச பாஷை பேசினர். நான் பேசியது ஒருவருக்கும் விளங்கவில்லை. கடைசியில் அங்கு ஒருவன் நம்முடைய மொழி பேசக்கூடியவன் வந்தான். அவனிடமிருந்து நான் பாண்டியநாட்டிலிருப்பதாகவும், மதுரையம்பதிக்கு வெகு சமீபத்திலிருப்பதாகவும் அறிந்தேன். மதுரை நோக்கிப் புறப்பட்டுச் சென்றேன். வழியில் ஒரு சத்திரத்தில் தங்கினேன். அங்கே சிலர் தாங்கள் தாமரிலிப்பட்டியிலிருந்து சானுதாசனைத் தேடி வருவதாகவும், அவனைக் கண்டதுண்டோ என்றும் என்னைக் கேட்டனர். நான் எனது மாமனுடைய செல்வத்தில் வாழச் சம்மதமில்லாததால் மறுபடி அங்குச்செல்லக்கூடாதென்றெண்ணினேன். அதற்குத் தக்கவாறு என்னைத் தெரிவித்துக் கொள்ளாமல் சானுதாசனைக் கண்டதாகவும் அவன் ஏறின கப்பல் உடைந்துவிட்டதால் வேறொரு கப்பலில் ஏறிப் பிறிதொரு தேசம் போய்விட்டதாகவும் கூறி யேமாற்றிவிட்டு மதுரையை அடைந்தேன். அங்கு நான் இரத்தின பரீக்ஷகனாக அமர்ந்தேன். எனது சாமர்த்தியம் எங்கும் பரவவே பாண்டிய அரசன் என்னை அழைத்து அவனுடைய இரத்தினங்களை விலைமதிக்கச் சொன்னான். அவனிடத்தில் அதிக விலையுள்ள பல இரத்தினங்கள் இருந்தன. அவற்றை விலை மதித்ததன் பயனாக அரசன் எனக்கு ஒரு மாளிகை அளித்தான். சிறிதுநாள் சென்றதும் இரத்தினப்பரீட்சையைவிட்டு நான் பஞ்சு வியாபாரம் செய்தேன். அந்த வியாபாரம் நடத்திக்கொண்டிருக்கையிலொருநாள் பஞ்சுக்கிடங்கில் தீப்பற்றிக்கொண்டது.

அந்த நாட்டிலே தீப்பிடித்து எரிந்து ஒருவனுக்குச் சொத்துச்சேதமானால் அந்தவீட்டுக்காரனும்நெருப்பில் விழுந்து உயிர்விட வேண்டுமாம். அவனாக உயிர் விடாவிட்டால் அண்டையில் இருப்பவர்கள் தீயில் தள்ளிவிடுவார்களாம். இதனைக்கேட்ட நான் எங்கே என்னைக் கொன்றுவிடுவார்களோ என்று பயந்து இரவே புறப்பட்டுக் காட்டுவழியாக ஓடினேன்.

வழியில் சிலர்சந்தித்தனர். அவர்கள் தாங்கள் தாமிரிலிப்பட்டியிலிருந்து வருவதாகவும், சானுதாசன் பஞ்சு வியாபாரம் செய்வதாகவும், அவனுடைய அம்மான் கங்காதத்தன் அவனை அழைத்துவரும்படி சொன்னதாகவும் சொன்னார்கள். நான் தாமரிலிப்பட்டிக்குப் போகப் பயந்து சானுதாசனுடைய பஞ்சுக்கிடங்கு தீப்பற்றிக்கொண்டதால் அவனும் தீயில் இறந்துபட்டான் என்று சொன்னேன். அவர்கள் அதனை நம்பாமல் தெற்குநோக்கி நடந்தனர். என்னை எவ்வாறாயினும் கங்காதத்தன் கண்டுபிடித்து விடுவான் என்று எண்ணி அவர்களைக் கூப்பிட்டு அவர்கள்தேடிச்செல்லும் சானுதாசன் நானே எனக் கூறினேன். அவர்கள் தாமரிலிப்பட்டி நோக்கித் திரும்பினார்கள். நானும் அவர்களோடு சென்று தாமரிலிப்பட்டி அடைந்தேன்.

அங்கு என் மாமனோடு பலநாள் வீணே கழிக்கச் சம்மதிக்கவில்லை. தங்கம் தேடச்சென்ற அரசனோடு கப்பலேறிப் பல துன்பங்களை அனுபவித்துக் கரை சேர்ந்தேன். மலைமேலேறி எல்லோரும் சென்றோம். மலைமேலே ஆடுகளின்மேல் ஏறிச் சென்றோம். உச்சியை அடைந்ததும் அந்த ஆடுகளைக் கொன்று ஆட்டுத்தோலைப் புரட்டி ஊன் இருக்கும் பக்கத்தை வெளியே வைத்துப் போர்த்துக்கொண்டோம். அப்போதுதான் பறவைகள் நாங்கள் மாமிச பிண்டம் என நினைத்துத் தூக்கிச்சென்று தங்கம் இருக்கும் இடத்தில் போட்டுவிடுமாம். அன்னவாறே பட்சியொன்று என்னைத் தூக்கிச் செல்லுகையில் வழியில் தோல் கிழிந்து விழுந்துவிட்டேன். நான் விழுந்த இடம் பரத்துவாசர் ஆசிரமம்.

பரத்துவாசர் தம் ஆசிரமத்திலிருந்து வெளிவந்து என்னை வரவேற்று உபசரித்தார். ஆயினும் எனக்கு என் தாயைப் பார்க்கவேண்டுமென்ற அவா அதிகமாக இருந்தது அவரோடு பேசிக்கொண்டிருக்கையில் சில பெண்கள் அவ்விடம் வந்தனர். அவர்களுள் ஒருத்தியைத் தன் மடிமீதிருத்தித் தடவிக் கொடுத்தார். அவர் சொன்னதாவது:—இந்தப் பெண் சுப்பிரா என்ற அரம்பைமகள் வயிற்றில் பிறந்த என்னுடைய மகள். இவளுடைய தாயான சுப்பிரபை கந்தர்வராஜனுடைய மகளாவாள். இந்திரன் என்னுடைய தவத்தை யழிக்கஎண்ணி இவளைவிட்டு என்னைக் கெடுக்கப் பார்த்தான். இவள் என் தவத்தில் ஈடுபட்டு எனது மனைவியாகி இந்தப் பெண்ணைப் பெற்றாள். இவளுக்கு வயதுவந்துவிட்டபடியால் நீ உன் மகளாகக் கொண்டு மணஞ்செய்து கொடுக்கவேண்டும். இவள் இசையில் வல்லவள்; இவளுக்கு இசையோடு நாராயண ஸ்துதி பாடத் தெரியும். இவளோடு ஒத்து எவன் நாராயண ஸ்துதி பாடுவானோ அவனே இவளுக்குக் கணவனாவான் என்றார்.

'கந்தர்வதத்தையையும் அழைத்துக் கொண்டு பரத்துவாசரிடம் விடைபெற்றுச் சம்பாநகரம் நோக்கிப் புறப்பட்டேன். சிறிது தூரஞ் சென்றதும் களைப்பாக இருந்ததால் இளைப்பாறத் தங்கினேன். அயர்ந்து தூங்கிவிட்டேன். விழித்த போது தங்கப் பல்லக்கில் பலர் சூழச் சம்பாநகர் அருகில் இருக்கக் கண்டேன். இவை யெல்லாம் பரத்துவாசரது அருளென்று அறிந்தேன். எனது பழைய நண்பர் பலரும் வந்தனர். துருவன் முதலான துஷ்ட நண்பரும் என்னைக் காண அஞ்சினர். எனது பூர்வீக வீட்டை வாங்கும்படி ஏற்பாடு செய்திருந்தபடியால் அந்த வீடு நோக்கிச் சென்றேன். வீட்டில் எனது தாயாரோடு பரத்தையான கங்காதத்தையையும் கண்டபோது எனக்கு உண்டான கோபத்துக்கு அளவேயில்லை. அவளோ எனது முதல்மனைவிக்கு வேண்டிய சைத்யோபசாரம் செய்துகொண்டிருந்தாள். நான் ஊரை விட்டகன்றதையும், நான் கைப்பொருள் இழந்ததையும் அரசன் ஒற்றர்மூலமாக அறிந்து கங்காதத்தையிட மிருந்து பொருள்களைத் திரும்பக் கவர்ந்து தங்களிடம் ஒப்புவித்ததாயும், கங்காதத்தையும் தான் செய்த தவறை எண்ணி வருந்தி அன்றுமுதல் இன்றளவும் ஒழுங்காக நடந்துவருவதாகவும் கூறி அவளையும் மனைவியாக ஏற்று நடத்தவேண்டு மென்று என் தாய் கூறினாள். ஒருவாறு சமாதான மடைந்தேன். அங்குச் சமுத்திரதின்னாவைக் காண ஆச்சரிய மடைந்தேன். அவள் கடலில் முழுகும் தறுவாயில் அவளைத் தேடி வந்த சகோதரர்கள் கண்டு அவளைக் காப்பாற்றி இங்கு அழைத்துவந்ததாகக் கேட்டேன். இவ்வாறு பல வகையில் மகிழ்ச்சிகொள்ளு மளவில் அரசனும் என்னைக் காணவந்தான். அவனைத் தக்கபடி வரவேற்று உபசரித்து அனுப்பினேன். இப்பொழுது நீயும் கந்தர்வதத்தையை மணந்தாய். உனக்குப் பலவகையிலும் சுகமும் மகிழ்ச்சியும் கிடைத்துவிட்டது.

---

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

7-ம் பத்து, 6-ம் தசகம்.

[264-வது பக்கத் தொடர்ச்சி]

7-ம் பாசுரம்.

என் திருமார்பன் றன்னை என் மலைமகள் கூறன் றன்னை
என்றுமென் னாமகளையகம்பால்கொண்ட நான்முகனை
நின்ற சசிபதியை நிலங்கீண்டெயின்மூன் றெரித்த
வென்று புலன் றுறந்த விசும்பாளியைக் காணேனோ?

"புலன் வென்றுதுறந்த" என்ற அடைமொழிகள் விசும்பாளிக்கு விசேஷமாகத் தோற்றுகிறபடியால் நான்முகனையே அந்தப் பதம் குறிப்பதாகக் கொள்வது உசிதம். இம்மஹானுக்கு இந்திரிய ஜயத்தால் தவ மூப்படையாமல்போனால் உலகசிருஷ்டியை, சேதனர்களின் பாப புண்ணியத்துக் கேற்பப் பகவான் கட்டளைப்படி நிர்வஹிக்க உபாத்தியப்படாதென்ற திருவுள்ளத்தால், பகவானே உள்புகுந்து சகல சிருஷ்

டிகளையும் நிர்மாணம் செய்தானென்பது பாசுரம். அவனே "விசும்பு" 14 உலகங்களையு மாள்பவ னல்லவோ"?

---

8-ம் பாசுரம்

ஆளியைக் காண்பரியாய் யரிகாண் நரியா யரக்கர்
ஊளையிட்டன் றிலங்கை கடந்து பிலம்புக்கொளிப்ப
மீளியம்புள்ளைக் கடாய்விறல் மாலியைக் கொன்று பின்னு
மாளுயர் குன்றங்கள் செய்தடர்த் தானையுங் காண்டுங்கொலோ.

பொழிப்புரை.—ஆளியைக்கண்ட குதிரையைப்போலவும் சிங்கத்தைக்கண்ட நரிகள் போலவும் அரக்கர் இராமராவண யுத்தத்தினில் பயத்தால் ஊளையிட்டு இலங்கையை விட்டோடி ரஸாதளத்தில் ஒளிந்து புகச்செய்து, சத்துருக்களுக்கு யமன்போன்றவரும் நேசருக்கு வெகு பிரியரானவரும், கெருடாழ்வான் பேரில் ஏறி மாலி சுமாலி என்கிற வெகு பராக்கிரம சாலிகளான ராக்ஷஸ ஸேநாதிபதிகளைக் கொன்று, இவ்வரக்கர்கள் ஸேனைகள் உயிர் துறந்த பிணங்கள் மலைகள்போல்குவிய ஜயவீரனாய் இலங்கையைஜயித்த இராமபிரானை ஒருக்கால் காணவாய்க்குமோ?

---

9-ம் பாசுரம்

காண்டுங்கொலே நெஞ்ச மேகடிய வினையே முயலு
மாண்டிறன்மீளிமொய்ம்பிலரக்கன்குலத்தைத்தடிந்
மீண்டுமவன் றம்பிக்கே விரிநீ ரிலங்கை யருளி [து
யாண்டுதன் சோதி புக்க வமரரி யேற்றினையே.

உரை:—கடிய வினையே முயலும் - குரூரமான தீச்செயல்களையே உற்சாகித்துச் செய்யும், ஆண் திறல்- ஆணுருவமான வீரத்தன்மையையுடைய, மீளி - மிருத்தியுவைப்போல், தீச்செயல் பிறர்க்குச்செய்யும் இடக்குகளிலே அமர்ந்த, அரக்கன்-ராவணன்குலத்தை (கும்பகர்ணன் இந்திரஜித்து முதலான அதி பராக்கிரம வீரர்களைக் குறித்துச் சொன்னபடி) தடிந்து- ஜெயித்து, அடர்ந்து மீண்டும்-திரும்பியும் யோஜனை செய்து இக்குலத்தில் யோக்கியனான விபீஷணன் ஒருவன் மிகுந்திருப்பதைக் கருதி, அவன் தம்பிக்கே - விபிஷணனுக்கே, விரிநீர் இலங்கையை யருளி—கடல் சூழ்ந்த இலங்கா இராஜ்ஜியத்தைக் கொடுத்தருளி, ஆண்டு - அயோத்தியா ராஜ்ஜியத்தில் முடிசூட்டிக் கொண்டு உலகரக்ஷணைக்காகப் பதினாருயிர வருஷம் இராஜ்ஜியத்தை வஹித்து ஆண்டு, தன் ஜோதிபுக்க- தன் அஸாதாரணமான ஜோதிமயமான வைகுண்டத்திற்கு ஏகிய, அமரர்த்-நித்ய ஸூரிகளின் நிர்வாஹகரான பகவான் ஸ்ரீராமபிரானை 'நெஞ்சமே' காண்டுங் கொலோ - காண்கைக்கு முடியுமோ, என்று தம் திருவுள்ளத்தை வினவுகிறபடி.

பதக் குறிப்புகள்:—அரி - சிங்கம், ஏறு-விருஷபம். இரண்டு பதங்கள் தாத்பரியமும் 'சிரேஷ்ட'னென்ற பொருளிலே இரட்டித்து உபயோகப்பட்டிருக்கிறது. "வினையே" என்ற ஏகாரம் - ஸீதையை அபஹரித்தது முதலாக எல்லாமுயற்சியும் தீங்கு விளைக்கவே வென்று தாத்பரியம்.

---

10-ம் பாசுரம்

ஏற்றரும் வைகுந் தத்தை
யருளும்நமக் காயர்குலத்
தீற்றிளம் பிள்ளை யொன்றாய்ப்புக்கு
மாயங்களே யியற்றிக்
கூற்றியல் கஞ்சனைக்கொன் றைவர்க்காய்க்
கொடுஞ்சேனை தடிந்து
ஆற்றல் மிக்கான் பெரிய
பரஞ்சோதி புக்க வரியே.

உரை:—ஆயர் குலத்து - இடையரான நந்தகோபர் கிரஹத்தில், ஈற்று இளம்பிள்ளை - பிறந்த சிறு குழவியாய் ஜநித்த கிருஷ்ணபகவான் மாமனான கம்ஸன் அறியாமல் வளர்வதின் நிமித்தம் நந்தகோபர் குமாரராகப் பிரவேசித்து, மாயங்களே இயற்றி—பூதனை சகடாஸுரன் முதலானபல எதிரிகளை விசித்திர சேஷ்டைகளால் கொன்று, கூற்று-மிருத்தியு, இயல் ஸ்வபாவத்தைத்தழுவித தன்னைப்பெற்றெடுத்த தாய் தந்தையர்களிடத்திலிருந்துபிரித்துக் கொடுமைசெய்த கம்ஸனைக்கொன்று, ஐவர்க்காய்-பஞ்சபாண்டவர்களுக்காகக்கொடுஞ்சேனையை,தடிந்து-ஒழித்து-தொலைத்து, ஆற்றல் மிக்காய் - தாம் அவதரித்த பெரிய காரியங்களெல்லாம் நடந்தேறியதின்பின்னர்,பெரிய பரஞ்சோதி புக்க, அரி-திருநாட்டிற்கு எழுந்தருளிய சிங்கமானது, நமக்கு-என் நெஞ்சாய்த் துணைநிற்கும் உனக்கும் எனக்கும், ஏற்றரும் - எவ்வளவு சிரேஷ்டரான பக்தர்களாலும் ஸ்வய தந்தரத்தால் அடையக்கூடாத, வைகுந்தத்தை - அவன் அருளாலேயே கூட்டிக்கொள்ளக்கூடிய வைகுந்த நாட்டை, அருளும் - கிருபையால் கொடுத்தருளும்.

விசேஷக் குறிப்பு:—திருநாட்டிலாகிலும் இதுவரையில் பகவானைத் தாம் காண நேரிடுமோவென்று சங்கைப்பட்டவர் பல ஜந்மங்களில் தவமியற்றிப் பக்தர்களான வஸுதேவர், தேவகி இவர்களின் நிமித்தம் பாரதப் போரில் துஷ்ட நிக்ரஹம் செய்ததை ஆழ்வார் தம் திருவுள்ளத்தில் உட்கொள்ளத் தமக்கும் அவன் திருநாடும் பரம கிருபையால் தந்தருளுமென்று தீர்மானித்து இப்பாசுரத்தில் கூறுகிறார்.

---

11-ம் பாசுரம்.

புக்கவரி யுருவா யவுணனுடல் கீண்டு வந்த
சக்கரச்செல்வன்றன்னைக்குருகூர்ச்சடகோபன்சொன்ன
மிக்கவோராயிரத்துளிவைபத்தும்வல்லாரவரைத்
தொக்குப்பல்லாண்டிசைத்துக்கவரிசெய்வரேழையரே.

பதக் குறிப்புக்கள் :–புக்கு-சத்துரு விஷயத்திலே ஸமயம்போலேயும் அவசியம்போலேயும் தூணினின்றுங்கூடப்,புகுந்தவன்போலே உருவமெடுத்துத் தோன்றிய,சக்கரச்செல்வன் தன்னை-சக்கராயுதத்தைத்தரித்திருக்கும் திருமாலை, ஏழையர்-விநயமுடையவர்கள்- அதாவது பகவானின் பக்தர்களினிடத்தில் பணிந்து

அவர்கள் சந்தோஷத்திற்கே கைங்கரியம்செய்பவர்- தொக்கு - கூட்டம் கூட்டமாய்கூடி ஒன்றுசேர்ந்து- "இத்தசகம் அப்பியஸித்தவர்களைப் பகவானுக்குப் பரிசரியம் செய்யவேண்டுமென்ற ஆவலுற்றவர்கள் வெகு பிரியபட்டுத் தினந்தினமாய் வழிபட்டுச் சாமரம்முதலானதுகள் வீசிக் கௌரவித்துக் தாஸராய் அடைவார்கள்" என்கிறார்.

இத்தசகத்தின் சுருக்கம்:—எம்பெருமான்தன்னை ஆச்ரயிப்பவர்கள் அவனைத் தங்கள் மனமார அநுபவிக்கப் பெறாதே மனக்கிலேசப்பட்டால் அவர்களுக்குத் தரிசனம்கொடுத்து அவர்கள்தம் துக்கத்தைப் போக்கடிப்பான்.

---

# கம்பர் சிருட்டியில் பிறந்த கற்பினாள்

[266-வது பக்கத் தொடர்ச்சி]

### அகலிகையின் தேய்வத் தன்மை.

**க**ம்பரைப்போல் இத்தகைக் கருத்தைக் கொண்டே அருணாசலகவிராயர் இராமநாடகத்தில், விசுவாமித்திரர் இராமபிரானுக்குச் சொல்லத் தொடங்கும்போதே "தேவியிவள் ராமா, கௌதமர் ஆவியிவள் ராமா" என்று பல்லவி தொடங்குகிறார். அதில் முதலிலேயே 'தேவியிவள்' என்று (அதாவது 'இவள் இறைவி' என்று) கூறுகிறார். இதனாலேயே கம்பர்கருத்தைத் 'தேவியிவள்' என்ற வார்த்தையால் அருணாசல கவிராயர் விளக்குகின்றார் என்பது நன்கு விளங்கும். இக்கருத்தை நன்குணர்ந்த பெரியோர்கள் வணங்கத்தகும் தெய்வங்களாக ஐந்து மாபெரும் பத்தினிகளைச் சுலோக ரூபமாகச் சொல்லி வைத்தார்கள். அதாவது,

"அஹல்யா த்ரௌபதீ தாரா
ஸீதா மண்டோதரீ ஸ்ததா
பஞ்சகன்யா படேந் நித்யம்
ஸர்வ பாப விநாசதே"

என்பது. அதாவது அகலிகை, த்ரௌபதி, தாரை, சீதை, மண்டோதரி இந்த ஐந்து கன்னிகைகளை எவனொருவன் காலையில் தியானிக்கின்றானோ, அவனது எல்லாப் பாபங்களும் அழிந்துவிடுகின்றன என்பது பொருளாகும். இவ்வாறு சொல்லியுள்ள தெய்வப்பெண்கள் ஐவரிலேயும் முதலாவதாகக் கொண்டது அகலியை. இங்ஙனமாக, இவள் பெயரை முதலிலே வைத்துப்பொறித்ததினாலேயே இவளுடையதெய்வத் தன்மை பாராட்டத்தக்கதாவதோடு, இவள்தெய்வந் தொழுத தெய்வமாம் என்று இதற்குமுன் கண்டதும் சான்றுவேண்டாதே நிறுவப்படுவதாகின்றது. ஆதலால் தெய்வம் என்பதற்குத் தடையொன்றுமில்லை. தெய்வம் என்ற ஏற்றத்தை முன்னிட்டே அவளுடைய பெயரையுங்கூட அறிஞர் மக்களுக்கு "அஹல்யபாய்" என்று பெயர் வைத்திருக்கின்றார்கள். மேல் நாட்டாரைப் போல் மரம், செடி, கொடி, கட்டை, கல் முதலானவைகளின் பெயரை நம் பிள்ளைகளுக்கிடாமலிறைவன் திருநாமத்தையே இடுகிறோம். கடவுட்பெயரையே பிள்ளைகளுக் கிடவேண்டுமென விளக்குவதற்கே 'அஜாமீனன் கதையும்' பாகவதம் பகருகின்றது. அதற்கேற்பவே பெரியாழ்வாரும்

"நம்பி பிம்பியென்று நாட்டுமானிடம் பேரிட்டால்
நம்பும் பிம்புமெல்லாம் நாலுநாளி லழுங்கிப்போம் [கால்
செம்பெருந் தாமரைக் கண்ணன் பேரிட்டழைத்தக்
நம்பிகாள் நாரணன் தம்மன்னை நரகம் புகான்"

என்று அருளினார். இவ்வாறு கருதித் தெய்வப்பெயர்இட்டழைக்கின்ற நம் நாட்டவர் 'அஹல்யாபாய்' என்னப் பெயர்வகிப்பாரானால் அவ்வகலிகை தெய்வந் தொழுமொரு தெய்வமே யென்பதற்கு மற்றோர் சான்றும் வேண்டற்பாலதன்று. இத்தகைக் கற்புக் கடவுட்கு அக்காலத்திலிருந்த பழியேபோல் இக்காலத்திலேயும் ஓர் பழி நிலவுகின்றதே.

### அகலிகையும் அம்மி மிதித்தலும்

விவாகச் சடங்குகளிலே 'சப்த பதி' என்ற சடங்கு நடந்தபின்னர் "அச்மாரோஹணம்" என்று சொல்லப்படுகிற அம்மி மிதிக்கும் சடங்கு ஒன்று நடக்கிறது. அச்சடங்குநடப்பதன் காரணமும் குறிப்பும் உலகில் பலவாறு கூறப்படுகின்றன. "அகலிகை கற்பிழந்து சாபமேற்றுக் கல்லாய்க் கிடந்தாள் ஆதலால் கற்பிழந்த அவளை அவமதிப்பதேபோல் இக்கல்லைக் காலால் மிதி" என்று மணகமன் மணமகளை மிதிக்கச் செய்கிறதாகக்கூறுவர். இவ்வழக்குப் பெரிதும் பொருத்தமற்றது. அகலிகை கல்லுருவினின்று நீக்கப்படுவதன்முன்னரும் கல்லுருபெறுவதன்முன்னரும் நடந்தவிவாகங்களிலே அம்மிமிதிக்கும் சடங்கு நடந்ததாய்ச்சாஸ்திரங்களாலும்சரித்திரங்களாலும் அறிகின்றோம். கௌஸல்யா பரிணயத்தில் அம்மிமிதித்தலைக் கூறியிருப்பதாக எனக்கொருவர் தெரிவித்தார். கௌஸல்யை ஸ்ரீராமனுடைய தாயார். அவருடையவிவாகத்தில் அம்மிமிதித்தல்சடங்குநடந்திருந்தால்அம்மி மிதித்தலுக்கு அகலிகை காரணமல்லள் என்பது தெற்றென விளங்கும். அகலிகைகற்பிழந்து கல்லாய்ச் சபிக்கப்பட்ட முகாந்திரத்தினால் அம்மி மிதித்தல்சடங்கு ஏற்பட்டதுஎன்று ஏதேனும் சாத்திரங்கள் சான்றுபகர்கின்றனவா என்று சாஸ்த்ரஜ்ஞர்களைக்கேட்டால் பெரும்பாலார் இல்லை யென்கிறார்கள். ஆயினும், காஞ்சீபுரம், பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கரா சார்ய ஸ்வாமிகள்' 'திவ்ய ப்ரபந்த திவ்யார்த்த தீபிகை'யில் 'நாச்சியார் திருமொழி வாரணமாயிரம்'8-ம் பாசுரத்தின் வ்யாக்யானத்தில் "அம்மி மிதிக்க" என்றது" அம்மி மிதிப்பிக்கை" என்றபடி; பாதிவ்ரத்யத்தில் பங்கமடைந்து கல்லுருவமடைந்து அஹல்யைத் திரஸ்காரஞ் செய்தல் அம்மி மிதிப்பதற்குக் கருத்து என்கிறார் ஒரு ஆராய்ச்சி நிபுணர். அஹல்யைபோ லல்லாமல் வழுவாத பாதிவ்ரத்யமுடையேனா யிருக்கக்கடவேன் என்று இதனால் காட்டிக்கொண்டபடியாம்" என்று எழுதியுள்ளார். அம்மி மிதிக்கும் சாஸ்திர ஆராய்ச்சி இப்பெரியாரறியாராயினும் இவருக்கு அறிவித்த அச் சாஸ்

திரிபுணரைக்கொண்டேனும் தெரிந்து அதில்எழுதியிருக்கலாம். தவறினாலும் அவர் இன்னாரென்று தெரிவித்திருந்தாலும் அவர்பாலேனும் தெரிந்துகொள்ளலாம். எதுவுமின்றிஇவர் இவ்வாறுஎழுதியதால் ஒன்றும்விளங்கியதாகஇல்லை. ஆதலாலிது பண்டிதர்க்கும் ஐயமுளகூற்றுபோலும். எனினும்ஒன்று நாம்தெரிந்துகொள்ளலாம். அகலிகைகல்லுருதவிர்ந்தசிலதினங்களுக்குள்ளேதான் ஸ்ரீராமபிரானுக்குத் திருமணம் நடக்கின்றது. அத் திருமணத்திலும் "இலங்கொளியம்மி மிதித்தல்" கூறப்பட்டிருக்கின்றது. அண்மையில்நடந்த அகலிகைவரலாறு அம்மிமிதித்தல் சடங்காகத் தோன்றுமானால் முதன்முதல் ஸ்ரீராமபிரான் திருமணத்திலேதான் நடந்திருத்தல்வேண்டும். ஜனகருடைய குருவான சதானந்தருடைய தாயார் அகலிகை. ஜனகர் தன் புத்திரி திருமணத்திலேயே தன் குருவின் தாயார் கற்பிழந்ததாக இருப்பதொரு சடங்கினை நடத்த மனம் ஒருப்படுவாரா? கௌதமர் அகலிகை முதலானாரும் அத்திருமணத்துக்கு வந்திருப்பாராதலால் அகலிகை கற்பிழந்த துண்மையாயினும் கூட அவர்கள் மனம்புண்பட ஜனகர்மனம் கூசாது அப்பொருளுடைய அச்சடங்கை இயற்ற உடன்படுவாரா? கம்பர்தான் அவ்வகலிகை கற்பிழந்ததாகவும் ஒப்புக்கொள்ளவில்லை. அகலிகை காரணமாகத்தான் அம்மிமிதித்தல் வந்ததற்கு ஆதாரவும் தரவில்லை. கற்பிழந்தாராகக் காட்டும் வால்மீகியும் அம்மி மிதித்தல் அகலிகை காரணமென்று ஒப்புக்கொள்ள வில்லை. அம்மி மிதிக்கும் விஷயத்தில் மாத்திரம் இருவரும் ஒன்றுபடுகிறார்கள். வான்மீகருடைய கற்பிழந்த அகலிகை உருவமற்றவளாகச் சாபம் பெறுகிறாள். கல்லியலாக வில்லை. ஆதலால், வால்மீகர் அகலிகை அம்மி மிதித்தற்குத் தகுதியற்றவளானாள். கம்பருடைய அகலிகைகல்லியலாயினுங்கூடக் கற்பிற் சிறந்ததெய்வப் பெண்ணாயினாள். ஆதலால் அவள் தொழுவதற்குரியளாயினளே யன்றி மிதித்தற் குரியளாக வில்லை. ஆக வடமொழி தென்மொழி இரண்டு காவ்ய ரத்னங்களால்படைக்கப்பட்ட அகலிகை காரணமாக அம்மி மிதித்தல் நடைபெற வில்லையென்று இதனால் நன்கு தெரிந்துகொள்ளலாம். பின்னே, அச்சடங்கின் பொருள்தான் என்னைஎன்று ஆய்தல் ஈண்டைக்குவேண்டற்பால தன்றெனினும் இவ்வகலிகையை இப்பழியினின்றும் நீக்குதற்குத் தெரிந்துகொள்வாம். விவாகத்திலே நடக்கும்ஒவ்வொரு சடங்குக்கும் மந்திரங்கள் உண்டு. அவைவேதமந்திரம். அம்மந்திரம் அச்சடங்கின்பொருளை விளக்குவதாயிருக்கும். இன்னின்ன மந்திரம் இன்னின்ன சடங்குகளின்போது சொல்ல வேண்டுமென்றுமகருஷிகள் சூத்திரங்கள்எழுதியுள்ளனர். அவைகளில் "ஆபஸ்தம்ப க்ருஹ்யசூத்ரம்" என்பதொன்று. அதில்அம்மிமிதிக்கும்போதுஇன்ன மந்திரத்தைச் சொல்லவேண்டுமென்று ஓர் சூத்திரம் விதிக்கப்பட்டிருக்கிறது :—

"அதைநாமுத்தலே நாக்நி தக்ஷிணேநபத
அஸ்மான மாஸ்தாபய—ஆதிதிஷ்டேதி"

(பொருள்) "பிறகு ஹோமாக்நிக்கு வடபுறத்தில் வலதுகாலைக் கல்லின்மேல் வைக்கவேண்டியது. அப்பொழுது ஆதிதிஷ்டே, ஆதிதிஷ்யே யென்ற அம்மந்திரத்தைச் சபிக்கவேண்டியது (பெண்ணினுடைய வலதுகாலைப் புருஷன் தனது வலதுகையால் பிடித்து வைக்கவேண்டியது.) இங்ஙனம்சொல்லுமச் சூத்திரம் குறிப்பிட்ட மந்திரம் எது, பொருள்என்ன என்றுகவனிப்போமானால் நன்கு விளங்கும். அதாவது:-
யஜுர்வேதம் - மந்த்ரப்ரச்னம் - 5-வது காண்டம்

"ஆதிஷ்டே மமஸ்மானம்
அஸ்மேவத்வம் ஸ்திராபவா:"

என்பது. இதற்கு, கடலங்குடிநடேசசாஸ்த்ரிகள்வியாக்யானக்கருத்தாவது: ஹேபெண்ணே! கல்லைமிதி. கல்லைப்போல் தைரியமாயிரு. சண்டை நேர்ந்த காலத்திலும் கல்லைப்போலவே இருப்பாயாக" என்பது. இதனால்அம்மிமிதித்தற்கு அகலிகை விருத்தாந்தம் சொல்லுவதற்கே இல்லை. ஆக எவ்விதத்திலும் அகலிகை வரலாற்றை முன்னிட்டு அம்மிமிதித்தல் நேரவில்லை என்பது நன்கு போதருகிறது. தவிர, ஆண்டாள்

இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான்
நம்மை யுடைய நாராயணன் நம்பி
செம்மை யுடைய திருக்கையால் தாள்பற்றி
அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீநான்"

என்று கூறுகிறார். இப்பாசுரத்தின் பின்னிரண்டடிகளின் 'பெரியவாச்சான் பிள்ளை' வ்யாக்யானத்தைப் பார்ப்போம். "(செம்மையுடைய திருக்கையால்தாள் பற்றி) பிள்ளை உறவுமுறையார் வேண்டாமென்பர்கள், பெண்பிள்ளை உறவுமுறையார் வேணு மென்று நிற்பர்கள். இப்படி இரண்டுதலையி லுள்ளாரும் வார்த்தை சொல்லாநிற்கச் செய்தே தானேவந்து காலைப் பிடிக்கக் கணிசியாதிருக்குமாய்த்து. அதாவது ஆச்ரிதர் கால்பிடிக்கவென்றால் இறாயாதகையாய்த்து. உபதேசகாலத்தில் போலன்றிறே பரிமாற்றத்தி லிருப்பது. உபதேசிப்பது அவன் காலைப்பிடிக்கக் கடவதாக. பரிமாற்றத்தில்வந்தால் அவன்றான் பிடிக்கும்படியாக வாய்த்து இருப்பது. (அம்மிமிதிக்கக் கனாக் கண்டேன்) அஸ்மாரோஹணம் பண்ணக் கனாக் கண்டேன். 'அவ்வம்மியில் ஓரடியிடில் செய்வதென்' என்று துணுக்குத்துணுக்கென் றிருந்தான்காணும். அடியிட்டானாகில் அதுவுமொரு பெண்ணாமே" என்று எழுதியுள்ளார்.

அரங்கன்மீது காதல்கொண்டு அவனது அருளைப் பெருமையால் அதுவே சிந்தனையாய் நெடிது செல்ல நனவிலிருந்த எண்ணமெல்லாம் முதிர்ந்து முதிர்ந்து கனவிலும் தோன்றக் கனவிற்கண்ட உண்மையை நமக்குப் பாசுரவடிவில் தந்துள்ளார். "அம்மி மிதிக்கக் கனாக் கண்டேன்" என்று பிதற்றினார். அதற்கு வியாக்யானம் "அவ்வம்மியில் ஓரடியிடில் செய்வதென்" என்று துணுக்குத்துணுக்கென் றிருந்தாள் காணும் அடியிட்டானாகில் அதுவுமொரு பெண்ணாமே" என்றுளது. "அதுவுமொரு பெண்ணாமே" என்றது அதிசயோக்தியாக ஸ்ரீராமபிரானுடைய திருவடித்துகள் கதுவப்பட்டதால் ஒருகாலத்தில் ஓர் பெண்பிறந்ததே அதைப்போல் இக்கல்லும் பெண்ணாய்விடுமோ என்னவோ என்று கலங்குவதாக வ்யாக்யானம் தோன்றுகிறது. இவ்வளவு காலம் அரங்கன் தன்னை ஆட்கொள்ளா திருப்பதால் ஏற்பட்ட காதல் மிகுதியாலே மணம்நடக்கின்றதாகக் காணும் கனவிலேயும் பெற்றோமென்று உகத்தற்கில்லாமல் இவ்விடையில் என்ன இடையூறு நேருமோ அன்றி முடியுமோ என்ற ஐயமும் அவதியும் துணுக்குத் துணுக்கென்று தனது உள்ளம் துடித்துக்கொண்

டிருக்க அம்மி மிதிக்கும் தருணம் வந்ததும் இத்தகைக் கல்லினின்றும் பிறந்தாள் ஓர் பேரழகி என்று ஆண்டாளறிந்திருக்கின்றாளாதலால் அது நினைவுக்கு வர அக்கல்லும் இவன் திருவடியில் பெண்ணாயிற்றென்று தெரிந்திருக்கின்றாராதலால் அப்போது அக்கல்லினின்றும்பிறந்த பேரழகி அகலிகையைப்போல் இப்போது இக்கல்லினின்றும் ஓர் பேரழகி பிறந்துவிட்டால் ஒருக்கால் அவளைக் கைக்கொண்டு இப்போதுங்கூடத்தன்னை எங்கே புறக்கணித்துக்கைவிட்டுவிடுவானோ என்னும் பயத்தால் துணுக்குத் துணுக்கென்றிருந்த அவர் 'அதுவுமொரு பெண்ணாமே' என்றுசொன்னார். இதனால்நாம்தெரிந்துகொள்வது, காதலொடுகலந்தபயத்தாலே நடக்கும்முறை இன்னதென்றும் அறியாமல் முறைபிறழ்ந்து பேசுகின்றாரென்பதை வியாக்யாதா குறிப்பாகக்காட்டிச்செல்லுகின்றார். அதாவது மணமகன் தனது வலக் கையால் மணமகள்தன் வலதுகாலைப் பற்றி அம்மி மிதிக்க வைக்க வேண்டும். அவ்வாறே ஆண்டாள் கனாக்கண்ட திருமணத்திலும் நடந்திருக்க வேண்டும். ஆயின் அம்மியை மிதிப்பது ஆண்டாளேயன்றி அரங்கன் அல்ல. அப்போது 'அதுவுமொரு பெண்ணாமே' என்றதினால் ஆண்டாளுக்கு வரத் தேவையில்லை. இவ்விஷயம் பெரியவாச்சான் பிள்ளையறியாதும் அருளினாரில்லை. "செம்மையுடைய திருக்கையால்" என்ற அடியில் "பிள்ளை உறவுமுறையார் வேண்டாமென்பார்கள், பெண்பிள்ளை உறவுமுறையார் வேணுமென்றாநிற்பார்கள். இப்படி இரண்டுதலையிலுள்ளாரும் வார்த்தை சொல்லாநிற்கச்செய்தே தானே வந்து காலைப் பிடிக்கக் கணிசியா திருக்குமாய்த்து" என்கிறார். இப்போது இச்சடங்கு இருதலையிலுள்ளாருடைய விளையாட்டின் போட்டியிலேயே நடக்கிறது; நாமும் அறிந்தது தான். முடிவில் மணமகன் மணமகளுடைய காலைப்பற்றி அம்மிமிதிக்க வைக்கிறான். அப்பொருள் தோன்றவே வியாக்யாதாவும் மூன்றாமடியில் "தானேவந்து காலைப்பிடிக்கக் கணிசியா திருக்குமாய்த்து" என்கின்றார். ஆண்டாளும் 'செம்மையுடையதிருக்கையால் தாள்பற்றி அம்மிமிதிக்க' என்கின்றார். இங்ஙனம் முதலடிக்குப் பொருளுரைத்த வியாக்யாதா அதன் கீழ்அடியில் மணமகன் அம்மி மிதிப்பதாகப் பொருளுரைப்பாரா? இங்கே ஆண்டாளடைந்தகாதல் கலக்கத்தால்பித்தேறிக் கனாவில் முறை பிறழ்ந்து பேசுகிறார் என்பதைக் காட்டும் குறிப்பின் நயம் தோன்ற "அதுவு மொரு பெண்ணாமே" என்று ஆண்டாள் நெஞ்சுதுடிப்பதாகப்பெரிய வாச்சான் பிள்ளை காட்டிச்சென்றார்.

இந்த வியாக்யானத்திலேயும் இதற்குரிய பாசுரத்திலேயும்அகலிகையைப்பற்றி யாதொன்றும்பேசப்படவில்லை. ஆதலால், அகலிகைக்கும் அம்மி மிதித்தற்கும் யாதொரு தொடர்புமில்லையென்று வான்மீகர், கம்பர், ஆபஸ்தம்பர், வேதம், ஆண்டாள், பெரியவாச்சான்பிள்ளை இவர்கள் அனைவரும் குறிப்பாகவும் தெளிவாகவும் காட்டிப்போனார். ஆதலால், அம்மி மிதித்தற்கு அகலிகையைப்பற்றிப் பேசப்படும் கதை தவறு என்றும் அசாஸ்த்ரீயமென்றும் பழியென்னவும் கொள்ளவேண்டும். ஆதலால், அகலிகை கற்பினுக் கரசியேயாம்.

முற்றிற்று.


# கலாநிலயம்

## முன்னைய வால்யூம்கள் இன்னும் சிலவே இருக்கின்றன, உடனே பெற்றுக்கொள்வது நலம்.

**1928, 1930, 1931, 1932, 1933, 1934** வருடத்தியவை கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| பைண்ட் செய்யாதவை—ஒவ்வொரு வால்யூமின் விலை ரூ. | 7 | 8 | 0 |
| ஆப்லெதர் கில்ட் பைண்ட் ,, | 9 | 0 | 0 |
| ஒரு வால்யூமை இரண்டு பாகமாகப் பிரித்துப் பைண்ட் செய்தது | 10 | 0 | 0 |

இந்தியாவிற்குள் இருப்பவர், இரயில்வே பார்சல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். பர்மா, ஸிலோன், மலேயா முதலிய இடங்களுக்குத் தபால் மூலமாகத் தான் அனுப்ப இயலும். இந்தியா பர்மா ஸிலோனில் உள்ள இடங்களுக்கு வால்யூம் ஒன்றிற்கு ரூ. 2-ம், மலேயா, தென்னாப்பிரிக்கா முதலிய வெளிநாடுகளுக்கு ரூ. 3-ம், தபால் பார்ஸல் சார்ஜ் ஆகும்.

இந்தியாவில் உள்ளவர் வேண்டிய வால்யூமின் விலையை அனுப்பித் தம்மூருக்கு அடுத்திருக்கும் இரயில் ஸ்டேஷனைத் தெரிவிக்கவும். அல்லது தபால் பார்ஸலில் பெற்றுக்கொள்ள விரும்பினால், அந்தக் கட்டணத்தையும் சேர்த்து அனுப்பவும்.

வெளி நாடுகளில் உள்ளவர் வேண்டிய வால்யூம்களின் விலையையும் தபால் கட்டணத்தையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயல்வதில்லை.



ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
நஞ்சன்கூடு பல்பொடி
கோரோஜனை மாத்திரை
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
I.D.L 61, மெடிகேடட்-டப்பி

ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
காஸ்ட்ராலகஸ்
ஜ்வரேக்

[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
REG. NO. M. 2324.

## வர்த்தமானம்

திருடர் பத்திரிகை:—திருட்டுத் தொழிலுக்கென்று தனியாக நடந்து கொண்டிருக்கும் "திருடர் பத்திரிகை"யைப் போலீசார் கண்டுபிடித் திருக்கிறார்கள். இந்தத் "திருடர் பத்திரிகை"யின் ஆசிரியர் உலகத்திலேயே பொறுக்கி யெடுத்த ஒரு போக்கிரியாம். இந்தத் "திருடர் பத்திரிகை"யில், எவ்விதம் இரும்புப் பெட்டிகளை உடைப்பது, எவ்விதம் திருடுவது, எவ்விதம் பொய்க் கையெழுத்திடுவது முதலிய திருட்டுத் தொழிலுக்காக வேண்டிய அனேககுறிப்புகள் வெளியிடப்படுகின்றன. இக்குறிப்புகளை யெல்லாம் கற்றுக்கொடுப்பவர் அனேக திருட்டுத் தொழில்கள் புரிந்து தண்டனைபெற்றவ ரென்றும் தெரிகின்றது. இத் தொழிலைக் கற்றுக்கொடுப்பவரின் படமும் கைதி உடையிலேயே அச்சிடப்பட்டிருக்கிறது. இவருடைய பெயர் "திருடர் சங்கத்"திற்குத் தலைவராகவிருக்கும் ஜே. எப். வாண்டின் என்பதாம். இந்த வினோதப் பத்திரிகை லண்டனைச்சேர்ந்த இல்போர்ட் என்ற இடத்தில் ஒரு குற்றவாளியைப் போலீசார் கைதுசெய்தபொழுது அவனிட மிருந்ததாம்.

* * *

எக்ஸரே கண்கள்:—சுதாபக்ஸ் என்ற காஷ்மீர் வாசி விசித்திரக் கண்களை யுடையவரா யிருக்கின்றார். இவருடைய கண்களை எக்ஸ்ரே கண்கள் என்னவே சொல்லலாம். இம்மாதிரி கண்களையுடையவர் உலகத்தில் இவர் ஒருவர்தானாம். இவர் புத்தகங்களைக் கண்ணால் பார்க்காமலே படிக்கிறாராம். இவர் சமீபத்தில் இவரது திறமைகளை, லண்டனில் காண்பித்திருக்கிறார். கண்களைக் கட்டிக்கொண்டு மோட்டார் ஓட்டுகின்றார். பலவித வர்ணங்களைக் காண்பித்தால் ஒவ்வொரு வர்ணத்தையும் சரியாகச் சொல்லுகின்றார். பிலியர்ட்ஸ் முதலிய விளையாட்டுகள் விளையாடுகிறார். இன்னும் அனேக விதமான வேலைகளைக் கண்களை மூடிக்கொண்டே செய்துவருகிறாராம்.

மோட்டார் எமன்:—அமெரிக்கா சென்ற மகா யுத்தத்தில் இழந்தவர்களைவிட அதிகமான மக்களை அந்த நாடுமோட்டார்எமனால் இழந்துவருகிறதாம். அமெரிக்க நகரவீதிகளில் மோட்டார் எமன்களால் உயிரிழப்போர்களின்தொகை நாளுக்குநாள்ஏறிவருகிறதாம். இதுபற்றி நியூயார்க் நகரப்போலீசார் நகரமெங்கும் எச்சரிக்கை விளம்பரங்களை ஒட்டியிருக்கிறார்களாம். சென்ற பதினெட்டு மாதங்களில் மோட்டார் எமனால் 51,000 பேர்கள் உயிரிழந்தார்களாம். 13,04,000 பேர்கள் காயமடைந்தார்களாம்.

* * *

இரு தலை ஆமை:—நியூயார்க் நகரை அடுத்த செனக் டாடி என்னும் ஊரில் வசிக்கும் பிராங்க் கிளப் என்பவரிடம் இருதலை ஆமை ஒன்று இருக்கிறது. அது இரு தலைகளாலும் உணவு கொள்கிறதாம்.

* * *

4000 பொன் நாய்:—பல பந்தயங்களில் வெற்றி பெற்ற மிக்-தி-மில்லர் என்ற பேர்போன வேட்டை நாயை ஒரு செல்வர் சமீபத்தில் 3342 பொன்னுக்கு வாங்கினாராம். மற்றொரு குட்டியை 2000 பொன்னுக்கு விற்றார்களாம்.

* * *

மின்சார மீன்:—நியூயார்க் மீன் காட்சிச்சாலையில் ஒரு மின்சார மீன் இருக்கிறதாம். அது வேண்டும்பொழுது வெளியாக்கும் மின்சார சக்தி ஒரு விளக்குக்குப் போதுமானதாம். அதனை ஒருவர் ஒரு செம்புக்கம்பியால் தொட்டார். அந்த மீன் உடனே வெளியாக்கிய மின்சார சக்தி அவரை சுமார் ஐந்தடி உயரத்தில் தூக்கி எறிந்துவிட்டதாம்.

* * *

ஒரு மணியில் விவாக ரத்து:—விவாகரத்துக்கள் மிகச்சுலபமாயிருக்கும்ஐரோப்பாவிலுள்ள யூகோஸ்லேவியாவில் மணஞ்செய்துகொண்ட மறு மணியில் விவாக ரத்து நிகழ்ந்திருக்கிறது. கோர்ட்டில் மண ஒப்பந்தம் செய்துகொண்டு வழியில் தம்பதிகள் பேசிக்கொண்டுபோகும்போது மனைவி கணவனிடம் அவன் வாக்களித்த வெகுமதிகளைக் கேட்டாள். அது பற்றி வாதம் நடந்தது. முடிவில் கோர்ட்டிற்குச் சென்று தங்கள் விவாகத்தை ரத்துச் செய்துகொண்டனர். விவாக ரத்துக்கள் செய்துகொள்ளுவதுசுலபமாயிருப்பதால்தான் இவ்வாறுநடைபெறுகின்றது.

**Indo-Commercial Bank, Ltd.,**
**Mayavaram.**
Capital, Reserves, etc.. as at 30th August 1935 : Rs. 10,62,245.
*BRANCHES :—*
*Madras Office :—*
**107, Armenian Street.**
*Bazaar Branch :—*
**260, China Bazaar Road.**
Madura, Karaikudi, Virudhunagar, Tuticorin, Kumbakonam, Tiruvarur, Erode, Vizianagaram, Pudukottah, Tinnevelly, Salem and Trichinopoly.
*SUB OFFICES:—*
Shiyali, Chidambaram, Conjeevaram and Tanjore.
*All kinds of Banking Business undertaken on terms which may be ascertained on application.*
**S. N. N. SANKARALINGA IYER.**
*Managing Director,*
**107, Armenian Street, Madras.**

**சிறந்த பலவிருத்தி ஔஷதம்**
சென்ற 53 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.
**ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்**
மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும்.
**32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1**
இனாம்! "காம சாஸ்திரம்" இனாம்!!
**ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,**
**26 பிராட்வே, மதராஸ்.**

Printed at the B. N. Press, Mount Road, and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)